Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 05 (26.02.2004) வியாழக்கிழமை இதழ் :148

**TOSHIBA**

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோனர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திக ளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

**IIS Office Automation**

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

## காணாமற்போன மீனவரை கடற்படையினர் இன்று தேடுவர்!

(வடமராட்சி)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய மீனவரின் தாக்குதலுக்கு இலக்காகி காணாமற்போன மீனவரை கண்டுபிடிக்கும் பணியில் கடற்படையினர் இன்று ஈடுபடவுள்ளனர்.

இன்று காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்படையினருடன் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவரும் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த செவ்வாய் அன்று மீன்பிடித்த தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை இந்திய மீனவரின் வாள்வெட்டுக்கிலக்காகி இருவர் காயமடைந்ததுடன் ஒருவர் காணாமற்போயிருந்தார்.

இந்தச் சம்பவத்தின்போது காணாமற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலமைப்பை மாற்றப்போவதாக ஜனாதிபதி கூறுவதை ஏற்கமுடியாது!

## —அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைப்பை மாற்றப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறுவதை நம்பமுடியாது. அவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே இவ்வாறு கூறியுள்ளார். இதனால் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியிலிருந்து வருகின்றபோதும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக 1994 ஆம் ஆண்டு சந்திரிகா எழுத்துமூலம் உறுதியளித்திருந்தபோதும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறை அகற்றப்படுமென ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய உறுதிமொழியை நம்பியே, மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பதி - ஜனாதிபதித் தேர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளருக்கு

# வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!



## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்துவரும் வாக்காளர்களை இராணுவம் தடுத்தால், பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கநேரிடும் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.**

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை நேற்றுக் கிளிநொச்சியில் வைத்து சந்தித்தபோதே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழர்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுமாயின் பாரதூரமான பின்விளைவுகளை அரசாங்கமும், படைகளும் எதிர்நோக்கவேண்டி நேரிடும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச்சென்று வாக்களிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கமாட்டார்கள் எனச் செய்திகள் வெளியாகியிருப்பது உண்மையானால் அது சமாதான நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கச்செய்யும் ஒரு செயலாகவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள் வாக்களிப்பதை தடுக்க

## யாழ்.மக்களின் கேள்விகளுக்கு

# தமிழ்மக்கள் வாக்களிப்பதை தடுக்க பல்வேறு சக்திகளும் முயல்கின்றன!

## மட்டு. அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன்

தமிழ்மக்கள் தேர்தலில் வாக்களிப்பதை தடுக்கும் முயற்சியில் பல்வேறு சக்திகள் முனைந்துவருகின்றன. எனினும் அவற்றை முறியடிக்கும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும் என விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் கௌசல்யன் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகளிடம் பொதுத் தேர்தல் வேட்பாளர்களை புலிகள் நேற்று கொக்கட்டிச்சோலையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அந்த நிகழ்வில் உரை யாற்றிய கௌசல்யன் நாடாளுமன்றத் தேர் தலில் மக்கள் வாக்களிக்கும் முறை குறித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா பதிலளிப்பார்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர் வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண மக்களுடன் உரையாடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையூடாகவே ஜனாதிபதி உரையாட விருப்பதாகவும் அவரிடம் கேள்விகளைக் கேட்க விரும்புவோர், தமது வினாக்களை எழுதி - 0112695488 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையின் ‘விடியும் வேளை’ எனும் நிகழ்ச்சியூடாகவே அவர் இந்த உரையாடலை நிகழ்த்தவுள்ளார்.

காலை 7 மணிமுதல் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளதாகவும் -

இதில் யாழ். மக்கள் தமது சந்தேகங்க ளைக் கேட்டு தெளிவுபெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## வாக்குச் சீட்டு அச்சிடும் பணி நேற்றே ஆரம்பமானது!

(கொழும்பு)

ஏப்ரல் இரண்டாம் திகதி இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக் கள் அச்சிடும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் அலுவலகம் விடுத்த செய்திக்குறிப்பிலேயே இந்தவிடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் 5698 வேட்பா ளர்கள் போட்டியிடுவதாகவும் இவர்களில் 3361 பேர் சுயேட்சைக்குழுக்கள் அடிப்படையில் போட்டியிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்!

(கிளிநொச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா, பொன்னம்பலம் கஜேந்திரகுமார், ஈ.பி.ஆர்.எல்.எப். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் இந்த தேர்தல் விஞ்ஞாபனத் தயாரிப்பில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புளியங்குள விபத்தில் இளைஞர் ஒருவர் பலி!

(வவுனியா)

வவுனியா - புளியங்குளம் பகுதியில் லொறியும் மோட்டார் சைக்கிளும் நேற்றுக் காலை மோதிக்கொண்டதில் மோட்டார் சைக் கிளில் சென்ற ஒருவர் மரணமடைந்தார். மற்றையவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்றுக்காலை 3.30 மணியளவில் புளியங் குளத்திலிருந்து விளக்குவைத்தகுளத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளை

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297



071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

ail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

# தமிழ்மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தவேண்டும்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

உலகம் எதிர்பார்க்கும் பிரதானமான அம்சமாக ஜனநாயகம் தமிழ் மக்களாகிய எம்மிடமிருந்து எப்படி வெளிவருகிறது என்பது உலகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்மக்கள் சரியாகக் கையாள்வார்களேயானால் அதிக இலாபம் அடையச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழ்மக்களாகிய எம்மை மீண்டும் ஒரு தேர்தல்களம் சந்திக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றது. தமிழர்கள் இலங்கையின் சுதந்திரத்திலிருந்து பல தேர்தல்களைச் சந்தித்த அனுபவத்தை கொண்டவர்கள்.

நாங்கள் எடுக்கப்போகும் முடிவுகளும், தீர்மானங்களும் தென்னிலங்கை அரசியலமைப்பையும், தமிழர்களின் அரசியலையும் தீர்க்கக்கூடியது. இது இலங்கைக்குள் சுருங்கிவிடும் விடயமெனக் கணக்குப் போடாதீர்கள். முழு உலகத்திலுமே முக்கியத்துவத்தை தமிழர் பக்கம் கொண்டுவரக்கூடிய தேர்தல்.

எனவே அவதானத்துடன் தேர்தலுக்கு வாக்களிக்க முயலுவதே பொருத்தப்பாடான அம்சமாகும். அதனை சற்று ஆழமாக நோக்குவோம்.

சிங்கள அரசியல் தலைமைகள் தமது நலன்களை அடைவதற்காக தமிழர்களின் அரசியல் உரிமைகளை ஆரம்பத்தில் பறித்தனர். கலவரங்களைத் தூண்டி, கைதுகள், படுகொலைகள் போன்ற தமிழர்களின் மனித உரிமைகளை மீறுகின்ற கொடுமைகளைப் புரிந்தனர்.

தென்னிலங்கையிலுள்ள சிறைச்சாலைகளை நிரப்புமளவுக்கு கைதுகள் அதிகரித்தன. இறுதியில் இலங்கையின் எல்லைக்குள்ளேயே தமது மக்களை தமிழன் என்ற காரணத்திற்காக அழிக்கும் போர்களை ஆரம்பித்து, சொத்துக்களையும், வாழ்வியலையும் முற்றாகப் பறித்தனர்.

சட்டங்களை தமிழர்களின் உரிமைகளுக்கு எதிராக வரைந்து அமுல்படுத்தியதுடன், வடக்கையும், கிழக்கையும் துண்டாடுவதற்கும் கிழக்குக்குள் சிங்கள இனத்தின் செல்வாக்கை ஏற்படுத்துவதற்கு கல்லோயா, வெலிஓயா என பல குடியேற்றங்களைத் ஏற்படுத்தினர்.

தமது இனத்தை இலங்கையின் முழுப்பாகத்திலும் குடியமர்த்தி ஆதிக்கத்தை புரியவேண்டுமென்பதற்காக இவ்வகையான குடியேற்றங்களை ஏற்படுத்தினர்.

இவ்வாறு சிங்கள அரசியல் தலைமைகள் ஒவ்வொன்றும் தமிழர்களாகிய எமக்கு கொடுமைகளையும், அழிவுகளையும் ஏற்படுத்தும் பொழுது - கைமாறாக தமிழன், சிங்கள அரசியல் தலைமைகளை தெரிந்தெடுக்கும் தேர்தல்களில் வாக்களிக்கத் தவறவில்லை.

அதேபோன்று சிங்களத் தலைமைகளுடன் ஒத்துழைத்து ஆட்சி அமைப்பதற்கு தமிழனின் அரசியல் தலைமை பின்நிற்கவில்லை. இவை எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொண்டு ஒவ்வொரு சிங்கள அரசியல் தலைமையும் - ஆட்சியையும், அதிகாரத்தையும் தமக்குரியதாக மாற்றிக்கொண்டன.

இத்தகைய சூழலிலிருந்து சற்று விலகிய தமிழர் அரசியல் தலைமைகள் அவ்வப்போது தமது மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்குப் போராடினார்கள். ஆரம்பத்தில் சிங்கள அரசியல் தலைமையின் நடவடிக்கைக்கு எதிராக அகிம்சை வழியில் போராடினார்கள்.

தேர்தல் வெற்றிகள் ஒவ்வொன்றையும் தமது அரசியல் உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், தக்கவைப்பதற்காகவும் போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆயுதப் போராட்டம் படிப்படியாக விருத்திபெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஜனநாயக அடிப்படைகள் தகர்ந்துபோயின. தமிழர்கள் ஜனநாயக, சமாதான தேர்தலை நிராகரித்தும், தேர்தலைப் பகிஷ்கரித்தும் ஒரு எதிர்ப்புப்போராட்டமாக காட்டினர். தேர்தல் பகிஷ்கரிப்பினூடாக தமிழ்மக்கள் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கு தங்கள் எதிர்ப்பையும், எச்சரிக்கையையும் வெளிப்படுத்தினர்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் தலைமைகள் சாக்குப்போக்குச் சொன்னார்களே அன்றி, தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்க்கமான தீர்வை முன்வைக்கத் தயாராகவில்லை.

இதனால், ஆயுதப்போராட்டம் தீவிரமாக வேகத்தைப்பெற்றது. இன்று பலமான இராணுவத்தையும், அதற்கான போராட்ட வலுவையும் கொண்டவர்களாகத் தமிழ்மக்கள் விளங்குகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனநாயகத்திற்கான முனைப்புக்களை மீளவும் தமிழ்மக்களாகிய நாம் உருவாக்கத்துணியவேண்டும். இது இலங்கைக்குள் அல்ல. முழு உலகத்திலுமே தமிழர்களின் அரசியல் பலத்தை உச்சநிலைக்குக் கொண்டுசெல்லும்.

இன்று உலகம் எதிர்பார்க்கும் மிகப்பிரதான அம்சங்களில் ஒன்றாக ஜனநாயகம் மாறியுள்ளது. அது தமிழ்மக்களாகிய எம்மிடமிருந்து எப்படி வெளிவருகின்றது என்பது உலகத்தின் நோக்காக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகவும், சாதுரியமாகவும் தமிழ்மக்கள் கையாளவார்களாயின் அதிக இலாபங்களை அடையச் சந்தர்ப்பம் கிடைக்கும். இது ஒரு இறுதியான சந்தர்ப்பம் என்பதை யாரும் மறந்துவிடாதீர்கள்.

இராணுவ, ஆயுத பலத்துடன் கூடிய போராட்டமாக மட்டுமன்றி அரசியல் பலத்துடனான போராட்டமாக மாறுகின்றபோது, அதாவது ஆயுத பலமும், அரசியல் பலமும் ஒன்று சேர்கின்றபோது, தமிழர்களின் தனித்துவம் உலகசக்திகளால் மதிக்கப்படும் என்பதுடன், இது ஒரு அங்கீகாரமாகவும் அமையும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை ஒன்றுள்ளது. அதற்குத் தமிழ்மக்களாகிய நாம் கூட்டாக முன்வந்து தேர்தல் களத்தை எதிர்கொள்ள வேண்டும்.

சர்வதேசம் தமிழ்மக்களின் முடிவுகள் ஒவ்வொன்றையும் கூர்மையாக அவதானித்துக்கொண்டு வருகின்றது. தமிழர்கள் உதிரியாக இருப்பதைவிட கூட்டாக இருப்பது எப்போதும் பலமானது. தென்னிலங்கை பேரினவாத சக்திகள் எம்மத்தியில் காலூன்றுவது என்பது பேரினவாதத்தை விலைகொடுத்து வாங்குவதற்கு ஒப்பானதே. அதேபோன்று போலிகள், ஏமாளிகள், விலைபோகும் பரம்பரையை விரட்டிவிட்டு யதார்த்தமாக தமிழர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்ற சக்திகளை இனங்காணுதல் வேண்டும். அத்தகைய ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்குவோமாயின் போராட்டம் இலகுவானதாகும். இலட்சியம் வெகுவிரைவில் சாத்தியப்படும் இந்தத் தேர்தலுக்கூடாக முழு உலகத்தையும் தமிழர் பக்கம் இலகுவாக வென்றெடுத்துவிடலாம்.

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தபால்திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளமுற்பணம் வழங்க இணக்கம்!

## 10 மில்லியன் ஒதுக்கீடு

தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 10 மாத சம்பள முற்பணத்தை வழங்குவதற்குத் தேவையான 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடுசெய்வதற்கு அஞ்சல் மா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளர்.

தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் 10 மாத சம்பள முற்பணம் வழங்குமாறு விண்ணப்பித்திருந்தனர். எனினும் அதற்கான நிதி இல்லாமையினால் வழங்க முடியாதென்றும் அதற்காகத் தேவைப்படும் 10 மில்லியன் ரூபாவை வழங்குமாறு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராசா அஞ்சல் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட அஞ்சல் மா அதிபர் கே.சேனவீர இதற்கான நிதியினை விரைவில் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

தபால் திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய நியமனங்களை வழங்குவது உடனடியாக சாத்தியமில்லை என்றும், மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்கி தபால் சேவைகளை நடத்துமாறும் அவர் பணித்துள்ளார்.

### ஜப்பானின் ‘பாஜ்’ நிறுவனத்தால்

# இயக்கச்சி அ.த.க.பாடசாலைக்கு புதிய வகுப்பறை நிர்மாணிப்பு

ஜப்பான் நாட்டினது “பாஜ்” நிறுவனத்தினால் இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வகுப்பறை கட்டடம் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இககட்டிடத் தொகுதியை கடந்த வாரம் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் திறந்து வைத்தார். இந்நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி.இராசம்மா இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பளை கல்விக் கோட்ட கல்வி அலுவலர் அகைலாய பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பளை கல்விக் கோட்டத்தில் தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம் ஆகியவற்றிற்கும் வகுப்பறை கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டுவருகின்றன. (34)


## அறிவித்தல்

### மாநகரசபை, யாழ்ப்பாணம்

### கட்டாக்காலி மிருகங்களை கட்டிவளர்த்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பொது இடங்களிலும், வீதிகளிலும் சேதங்களையும், விபத்துக்களையும் ஏற்படுத்த ஏதுவாக அமைவதை தடுப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகிறது. ஆடு, மாடுகளை வீடுகளில் கட்டி வளர்ப்பதற்கு ஆவண செய்யுமாறும், இதனைமீறிக் கட்டாக்காலியாக அலையும் மிருகங்களைப் பிடிப்பதற்கும், தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 84 (1), 84 (2), 84 (3), 85 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் பொதுமக்கள் யாவரும் கருத்தில்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-2255)



## சிறுவிளம்பரம்

### தொலைபேசிகள் தேவை

R.L.L தொலைபேசிகள் விற்பனைக்கு இருப்பின் கடித மூலமோ அல்லது நேரடியாகவோ உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு:- ம.நிமால், கும்பிளாவளை, அளவெட்டி. (640)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HERO HONDA உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- NO 9 பிளக்கர் ஒழுங்கை சுண்டுக்குளி T.P 021-222-7357, 0777-113880. (642)

### யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்றுமுதல் விக்ரம், த்ரிஷா நடித்த

சாமி

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

CHICACO

(சி-2196)

### ராஜா யாழ்ப்பாணம்.

சிலதினங்கள் மட்டும்
விஜயகாந்த், வடிவேலு,
பிரபுதேவா,
பாண்டிய ராஜன் நடித்த



எங்கள் அண்ணா

27 ஆம் திகதி முதல்
பார்த்திபன், விக்னேஸ் நடித்த

சூரி

10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)

(சி-2197)


## மெய்வன்மைப் போட்டிகள்

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.இராசதுரை தலைமையில இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ. வரதராசமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (34)

★ ★ ★

யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு வித்தியாசாலை அதிபர் க.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. செ.நாகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) பிரதம விருந்தினராகவும, எஸ்.ரி.பத்மநாதன், எம். பரமேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## உடற்பயிற்சிப் போட்டி

பளை கல்விக் கோட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டிகள் நாளை காலை 9 மணிக்கு பளை மத்திய கல்லூரி மைதானத்தில் கோட்டக் கல்வி அலுவலர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (34)

## சம்மேளனத் தெரிவுக் கூட்டம்

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி சங்கத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மகாசங்கச் சம்மேளனம் அமைப்பதற்கான தெரிவுக்கூட்டம் நாளை மறுதினம் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மகாசங்கத்திற்கு 27 பேரைக்கொண்ட நிறைவேற்றுக்குழு தெரிவுசெய்யப்படவிருக்கிறது. (24)

## மாட்டுவண்டில்களுக்கு உரிமம் செலுத்துக

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள துவிச்சக்கர வண்டிகள், இரட்டை மாட்டு வண்டிகள் ஆகியவற்றுக்கு இவ்வாணடுக்கான உரிமங்களை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார். (133)

## திருடப்பட்ட தளபாடங்கள் காவற்துறையால் மீட்பு

கடந்த 16 ஆம் திகதி இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் திருடப்பட்ட தளபாடங்கள் தமிழீழ காவற்துறையினால் மீட்கப்பட்டுள்ளது.

இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திருடப்பட்ட தளபாடங்கள் தொடர்பாக, பாடசாலை அதிபர், பளை காவற்துறையினருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் தமிழீழ காவற்துறையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால், உடையார்கட்டில் இந்தத் தளபாடங்கள் மீட்கப்பட்டதுடன சந்தேக நபர்களையும் காவற்துறையினர் கைது செய்துள்ளனர். (17)


### வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யாழ்.மாவட்டம்

## பரிசளிப்பு விழா

‘யுனிசெப்’ நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய கட்டுரை, சித்திரப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 28.02.04 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் 1ம், 2ம், 3ம் பரிசு நிலையிலிருக்கும் மாணவர்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளபடி இவ் விழாவிற்கு தவறாது கலந்துகொண்டு தங்கள் சான்றிதழ்களையும் பணப்பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்.
இல. 63 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 222-5932 (சி-2253)

# திருமலை மாவட்டத்தில் 8 கட்சிகள், 11 சுயேட்சைக் குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன

(திருமலை)

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திருமலை மாவட்டத்தில் பதினொரு அரசியற் கட்சிகளும், எட்டு சுயேட்சைக் குழுக்களும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இவ்வாறு வேட்புமனுக்களை தாக்கல் செய்த கட்சிகள் மற்றும் குழுக்களில் ஒரு அரசியற் கட்சியினதும், இரண்டு சுயேட்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எனவே 10 அரசியற் கட்சிகளும், 6 சுயேட்சைக் குழுக்களுமே தேர்தலில் போட்டியிடவுள்ளன.

இதேவேளை, கோணாமலை மாதவராஜா தலைமையிலான சுயேட்சைக் குழுவொன்றும் நேற்றுமுன்தினம் வேட்புமனுவைத் தாக்கல்செய தது.

ஐக்கிய தேசியக் கட்சியில் எந்தவொரு முஸ்லிம் வேட்பாளரும் இடம்பெறாத அதேவேளை, சென்றமுறை ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.முகமட் ம..றூப் தலைமையில் கே.என்.தௌபிக் முகமட் நஜீப், எம்.எஸ் ஹுசன் மௌலவி முகமட் மதார், முகமட் மரிக்கார் ஆகியோர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் இணைந்து போட்டியிடுகினறனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளராக சுனில்தாச ரணவீரவும், ஏனைய ஐந்து பெரும்பான்மைச் சமூகத்தவரும், ஒரு தமிழரும் போட்டியிடுகின்றனர்.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் வண.வெல்லங்கொட உபரத்தின தேரர் உட்பட மேலும் ஆறு புத்த பிக்குகள் போட்டியிடுகின்றனர்.

திருமலை மாவட்டம் முழுவதும் 278 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதெனவும், சென்ற வருடத்தைவிட இந்தமுறை 59 புதிய வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், தேர்தல் பணிகளுக்காக நான்காயிரம் பேர் ஈடுபடவுள்ளதாகவும், திருமலை மாவட்ட அரச அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அத்தியட்சகருமான காமினி றொட்றிக்கோ தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான சம்பூர், ஈச்சிலம்பற்று வாக்காளர்கள் வாக்களிப்புக்கு ஏதுவாக அவர்கள் வந்துபோவதற்கு அண்மித்த பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும், சென்றமுறை போன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் வாக்களிக்க இடையூறுகள் ஏற்படாத வண்ணம் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும்,

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாக இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் மாவட்ட செயலக வளாகத்திற்குள் வாக்கு எண்ணும் 20 நிலையங்கள் அமைக்கப்படும் அதில் 16 நிலையங்களில் சாதாரண வாக்குகளும், 3 நிலையங்களில் தபால்மூல வாக்குகளும், ஒரு நிலையத்தில் இடம் பெயர்ந்த வாக்காளர்கள் அளித்த வாக்குகளும் எண்ணப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (4,10)

# வெள்ளிக்கிழமைதோறும் கட்சித் தலைவர் சந்திப்பு

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும்வரை, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசத் திட்டமிட்டிருப்பதாக, தேர் தல் ஆணையாளரின் அலுவலகம் அறிவித்துள்ளது.

நீதியான தேர்தலை நடத்துவது தொடர்பான சாத்தியமான அனைதது விடயங்களையும் கலந்துரையாடவே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்தச் சந்திப்புக்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என தெரியவருகிறது.

# ஐ.தே.க செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. மீது கடும் கண்டனம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாடு ஒன்றில்- ஜே.வி.பி. மீது கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. 1971, 1983, 1988-90 காலப்பகுதிகளில் இந்த நாட்டிற்கும், சிங்கள- பௌத்த கலாசாரத்திற்கும் ஏற்பட்ட பெரும்பாதிப்பிற்கு ஜே.வி.பி.யே பொறுப் பேற்கவேண்டும் என்று அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பி.யின் கடந்தகால தவறுகளால் கொல்லப்பட்ட பௌத்த துறவிகளதும், கிறிஸ்தவ பாதிரிமார்களினதும் மற்றும் பொதுமக்களினதும் பெயர்களும் இந்த மாநாட்டில் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு, இப்படுகொலைகள் தொடர்பில் எதுவித மன்னிப்பையும் இதுவரை ஜே.வி.பி. கோரத்தவறிவிட்டது எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களும், பம்பாய் வெங்காயம், மைசூர் பருப்பு முதலான இந்தியப் பொருட்களின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களும் ஜே.வி.பியினால் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டதாகவும், இவர்களது குடும்பத்தினரிடமும் ஜே.வி.பி. மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் அந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

# பிரசார நடவழக்கைக்கு பௌத்த கொழகளா?

## பௌத்த அமைப்பு குற்றச்சாட்டு

ஜாதிக ஹெல உறுமய கட்சி பிரசார நடவடிக்கைகளில்- பௌத்த கொடியைப் பயன்படுத்தி வருவதறகு பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

மகா சங்கத்தினர் அரசியலில் ஈடுபடுவதையிட்டு நாம் கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால், அவர்கள் பௌத்த கொடியை அவமதிக்கக் கூடாது.

ஜாதிக ஹெல உறுமய பௌதத கொடிகளை அரசியற் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளில் பயன்படுத்தக்கூடாது.

இது மக்களை ஏமாற்றி அரசியல்ரீதியில் தவறாக வழிநடத்திச் செல்வதற்கான முயற்சியாகும் என்று இந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.



யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த அமெரிக்க ஒத்துழைப்பு நிலைய அதிகாரிகளை முதலாவது படத்திலும், அவர்களுடன் கலந்துரையாடிய பிரமுகர்களின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்

# உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஆலயங்களைப் புனரமைக்க நடவழக்கை

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள சில இந்து ஆலயங்கள் திருத்தியமைக்கப்படுமென பிரதமரின் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஏ.எஸ்.குணசிங்கம் இது குறித்து கருத்துக் கூறுகையில்,

சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கும் பல ஆலயங்கள் பிரதமரின் செயலகத்தின் தலையீட்டினால் மக்கள் வழிபாட்டிற்காக திறந்து விடப்பட்டதாக குறிப்பிட்டார்.

அத்துடன், இவ்வாறு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கும் சுமார் 34 ஆலயங்களைத் திருத்தியமைப்பதற்கு பிரதமரின் செயலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் ஆலயங்களுள் யுத்தத்தின் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மூன்று ஆலயங்களின் அவசரத் திருத்த வேலைகளுக்கான பணம் இந்து கலாசார அமைச்சின் ஊடாக பெறப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொ.ஐ.மு. முன்னாள் எம்.பி பிரசாரம் செய்ய மறுப்பு!

(கல்முனை)

முன்னாள் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலின பண்டார தென்னக்கோன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலில் தமது பெயர் இடம்பெறாததைத் கண்டித்தே, பிரசார நடவடிக்கையில் இருந்து விலகப்போவதாக இவர் அறிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு திலின பண்டார தென்னக்கோன் எழுதியுள்ள கடிதத்தில், தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதன் பின்னர் இவை குறித்து விளக்கமளிக்குமாறு கோரியுள்ளார்.

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் பணிகளை ஆரம்பித்தனர்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

இலங்கையில் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்கான சர்வதேச உறுப்பினர்களைக் கொண்ட குழு தமது கண்காணிப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

தென்னாசியா, ஐரோப்பா, பெல்ஜியம், கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த 15 பேர்கொண்ட கண்காணிப்புக் குழுவினர், கடந்த திங்கட்கிழமை பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பவ்ரல் அமைப்பின் ஆணையாளர் கிங்ஸ்லி றொட்ரிகோ தெரிவித்தார்.

இந்தக் குழுவில் நால்வர் கொழும்பு மாவட்டத்திலும், ஏனைய 11 பேரும் தலா ஒருவர் என்ற அடிப்படையில் 11 மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாறை, புத்தளம், மாத்தளை ஆகிய பகுதிகளுக்குச் சென்று தமது கடமைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்!

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டே தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனை சந்திக்கவுள்ளார்.

இந்தத் சந்திப்பு எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதாக, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தமாதம் முதலாம் திகதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்ட, புறூவ் ஹொவ்டேயும் தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்ளும் இந்தச் சந்திப்பில், தொடர்ந்தும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தவுள்ளதாகவும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

# இரண்டு பெரும் பிரிவுகளாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

எதிர்வரும் தேர்தலுக்கான பாதுகாப்புப் பணிகளை, திட்டமிட்ட வகையில் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்னர், தேர்தலுக்குப் பின்னர் என்ற அடிப்படையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு- நீதியும், நியாயமுமான தேர்தலை உறுதிப்படுத்த தேர்தல் திணைக்களம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்தும்போது, சில சந்தர்ப்பங்களில் பொலிஸ் அதிகாரிகள் தமது கடமைகளை நிறைவேற்றத் தவறுவதர்கவும், பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும், பொதுமக்களால் பிரதிப் பொலிஸ் மா அதபருக்கு குற்றச்சாட்டுகள் கூறப்படடன. விசேடமாக இவ்வாறான சந்தர்ப்பங்களில் செயறபடுவதற்காக, கண்காணிப்புக் குழுக்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களினதும், அரசியற் தலைவர்களினதும் பூரண ஒத்துளைப்பு எமக்குத் தேவைப்படுகின்றது. நாம் எமது பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்போம். விசேடமாக ஆதரவாளர்களுக்கு மதுவை அருந்தக் கொடுக்காது - சட்ட விரோத ஆயுதங்களைப் பயன்படுத்த இடமளிக்காது - அமைதியான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### 63 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல்கள் தொடர்பாக 63 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகளை பதிவு செய்யும் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டது.

நேற்றுமுனதினம் 10 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக தேர்தல் கண்காணிப்புக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது. (01)

# எல்லைப் பிரச்சினையைத் தீர்க்குமாறு இறக்காமத்தில் பூரண ஹர்த்தால்!

அம்பாறை மாவட்டத்திலுள்ள இறக்காமம், அக்கரைப்பற்று பிரதேசங்களுக்கிடையிலுள்ள எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கக் கோரி அப்பகுதி முழுவதும் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் முழுமையாகப் பூட்டப்பட்ட நிலையில் வீதிகள் யாவும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதனால் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை.

இந்த எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்காவிட்டால், எதிர்வரும் பொதுத்தேர்தலில் தாம்வாக்களிக்கப் போவதிலலையெனவும் இறக்காமம் பகுதிமக்கள் தெரிவித்தனர். (01,07)

# சுப்பலீக் 2 ஆவது சுற்று ஆட்டங்களில் இலங்கை, இந்திய அணிகள் வெற்றி!

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

(டாக்கா)

19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி - மேற்கிந்தியத்தீவுகள் அணியை 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.


முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 253 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சுரேஷ் ராய்னா 66, ராயுடு 47, கார்த்திக் 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

254 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, இந்திய வீரர்களின் அபார பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓட்டங்களைச் சேர்க்கத் திணறியது. அந்த அணி 39.1 ஓவரில் 157 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால், இந்திய அணி 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக அந்த அணி வீரர் புதைதீன் 51 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய தரப்பில் சர்மா 4 விக்கெட்டுக்களையும், கவுரவ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 66 ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் சுரேஷ் ராய்னா ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டாக்காவில் நடந்த மற்றுமொரு ஆட்டத்தில் இலங்கை அணி 29 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியை வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்



படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை இலங்கை அணி குவித்தது.

இந்த அணி சார்பாக தரங்க 9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 117, நாவல 56, டி சில்வா 42, குலசேகரா ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆபிரிக்கா 3, வான் ஜார்ஸ்வெல்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

278 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்காவின் முதல் 3 விக்கெட்டுக்களும் குறைந்த ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டது. இந்த அணியின் இரண்டாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய பூய்சென் மிகச்சிறப்பாக விளையாடி 120 ஓட்டங்களைக் குவித்தார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த அணிசார்பாக பூய்சென் 120, பிளண்டர் 30, மோ்வி 36 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ம..றூப் 4, சானக, சுறாஜ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ரத்னாயக்க ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# விளையாட்டு

# தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டி நியூஸிலாந்து தொடரைக் கைப்பற்றியது!

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் சா்வதேச ஒரு நாள் போட்டித் தொடரின் நேற்றைய நான்காவது ஆட்டத்தில் - நியூஸிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தது.





முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து, களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால், தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக அணித்தலைவர் ஸ்மித் 37, நிக்கிபோஜி 50, பௌச்சர் 35, றுடோல்ப் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜேக்கப் ஓரம் 3, மாஷன், மில்ஸ், கெயின்ஸ், ஸ்ரைஸ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

260 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கிய நியூஸிலாந்து வீரர்கள் தென்னாபிரிக்க வீரர்களின் பந்துவீச்சுக்களைத் துவம்சம் செய்து 49 ஆவது ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

இந்த அணி சார்பாக பப்ஸ் 29, அணித்தலைவர் பிளமிங் 51, மார்ஷல் 74, ஸ்ரைஸ் 69, கெயின்ஸ் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் என்ரினி 2, நெல், போஜி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நடந்து முடிந்த நான்கு போட்டிகளில் நியூஸிலாந்து 3:1 என்ற ரீதியில் வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

# நியூஸிலாந்து அணியில் மீண்டும் ஹரிஸ்!

(வெலிங்ரன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆவது ஒருநாள் போட்டி வரும் 28 ஆம் திகதி நடைபெறும். இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்த அணியில் கிறிஸ் ஹரிஸ் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த டிசம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான 4 ஆவது போட்டியின்போது அவர் நீக்கப்பட்டார்.

ஹரிஸ் ஒருநாள் போட்டியில் 4250 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன், 199 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார். 5 ஆவது ஒருநாள் போட்டிக்கான நியூஸிலாந்து அணி வருமாறு -

ஸ்ரீபன் பிளமிங் (அணித்தலைவர்), மைக்கல் பப்ஸ், மார்ஷல், ஸ்ரைஸ், மக்மிலன், கெய்ன்ஸ், ஜேக்கப் ஓரம், மக்கலம், விட்டோரி, மில்ஸ், ரபி, மைக்கல் மேன்சன், கிறிஸ் ஹரிஸ்.

# மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும், நாளையும் காலை 9 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களை உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (12)

★ ★ ★ ★ ★ ★ ★ ★

(நவிண்டில்)

யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு அதிபர் க.பொன்னையா தலைமையில் கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக ந.ஆனந்தராஜ் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, திருகோணமலை) கலந்துகொள்ளவுள்ளார். (116)

★ ★ ★ ★ ★ ★ ★ ★

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சு.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.முத்துராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (41)

★ ★ ★ ★ ★ ★ ★ ★

(புங்குடுதீவு)

யா/புங்குடுதீவு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் கா.குகபாலன் பிரதம விருந்தினராகவும், தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.ராதாகிருஷ்ணன், புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்தி சங்கத் தலைவர் நா.சுந்தரராஜா, தீவக அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வடமராட்சி வலய பாடசாலைகளின் கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

(நவிண்டில்)

வடமராட்சி வலய கல்வி அலுவலகத்தினால் வடமராட்சி பாடசாலைகளுக்கிடையில் கடந்த 22, 23 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் - 15 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும், இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

19 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும், விக்னேஸ்வராக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

சகல மூன்று பிரிவுகளிலும், உடுபபிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்த வலயப் போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்ற இந்த அணிகள் மாவட்ட ரீதியில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளன. (116)

# தமிழீழ பெருவிளையாட்டு விழா; ஆறாம் நாள் போட்டி முடிவுகள்!

மூன்றாவது தமிழீழப் பெரு விளையாட்டின் 6 ஆம் நாள் நிகழ்வுகள் நேற்றுக் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளன் ஏற்றி வைத்தார்.

விளையாட்டுத்துறை நிதிப்பொறுப்பாளர் அன்பாளன், முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கானகன், விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த வேங்கை, மன்னார் விளையாட்டு அலுவலர் கென்ஸ்லம்பேட், முல்லை விளையாட்டு அலுவலர் முகுந்தன் யாழ். கிரிக்கெட் அணித்தலைவர் கௌரிபாகன், மட்டு. கிரிக்கெட் அணித் தலைவர் அருண்பிரசாத், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணித் தலைவி தயாளினி, மட்டு. வலைப் பநதாட்ட அணித்தலைவி நிர்மலா ஆகியோர் மாவீரர் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி நடைபெற்றது. கபடிப் போட்டியாளர்கள் பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவுத் தளபதி இமையாளனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

கபடிப் போட்டியில் மட்டு. அணி 29:15 என்ற புள்ளி அடிப்படையில் கிளிநொச்சி அணியை வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இன்னொரு கபடி அரையிறுதிப் போட்டியில் - வவுனியா அணி முல்லைத்தீவு அணியை 32:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதியானது.

மட்டு - வவுனியா அணிகளுக்கு இடையிலான இறுதிப்போட்டி இன்று நடைபெறும்.

ஆண்களுக்கான கபடி அரையிறுதிப் போட்டியில் வவுனியா அணி 56:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அம்பாறை அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

மன்னார் - யாழ். அணிகளுக்கு இடையேயான இன்னொரு கபடி ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் வீரர்கள், தாக்குதல் பிரிவுத் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் வீமனுக்கு முதலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து போட்டி இடம்பெற்றது.

யாழ். அணி 36:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மன்னார் அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

ஜஸ்ரின்ஸ்ரேரா, விமலசேன, அபயகுலசேகர ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

கபடி ஆண்களுக்கான இறுதிப் போட்டி இன்று யாழ் - வவுனியா அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட வீராங்கனைகள், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப்பொறுப்பாளர் அஜந்தனுக்கு அறிமுகம் செய்து வைத்கப்பட்டனர்.

இப்போட்டியில் திருமலை அணி 29:9, 29:13, 29:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று லெப். சபா நினைவுக் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

இந்தச் சுற்றுப்போட்டி சேரன் வாணிபத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.

நடுவர்களாக செல்வராசா, மலிந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

துடுப்பாட்ட அரையிறுதிப் போட்டி யாழ் - வவுனியா அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாண அணித்தலைவர் வவுனியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

30 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்களை வவுனியா அணி பெற்றுக்கொண்டது. றொபின்சன் 5 சிக்ஸ்கள் உட்பட 35 ஓட்டங்களையும், வினோத்குமார் 5 பவுண்டரிகள் உட்பட்ட 32 ஓட்டங்களையும், பெற்றுக் கொண்டனர்.

யாழ். அணியின் றொபேசன் 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் சாள்ஸ் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பொடுத்தாடிய யாழ். அணி 28 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிவராசா ஏழு பவுண்டரிகள் உட்பட 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முகுந்தன் 15 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

கிருபாகரன், முருகவேள் ஆகியோர் மைதான நடுவர்களாகவும் செல்வராஜா தொலைக்காட்சி நடுவராகவும் கடமையாற்றினர்.

இன்று நடைபெறும் மட்டு - அம்பாறை அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியும், யாழ். அணியும் நாளை இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளும்.

ஆண்களுக்கான தாச்சி அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணி 21:2 என்ற புள்ளி அடிப்படையில் திருமலை அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.


கிளிநொச்சி, முல்லை அணிகளுக்கிடையில் நடந்த மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி அணி 16:6 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்று நடைபெறும்.

பெண்களுக்கான தாச்சி போட்டியில் திருமலை. அணி சமூகமளிக்காத காரணத்தால், யாழ். அணி வென்றதாக அறிவிக்கப்பட்டது.

வவுனியா- முல்லை அணிகளுக்கிடையில் நடந்த மற்றொரு பெண்களுக்கான அரையிறுதி தாச்சிப் போட்டியில் முல்லை அணி 8:6 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதிப்போட்டிக்கு தெரிவானது.

யாழ் - முல்லை அணிகளுக்கான இறுதிப் போட்டி இன்று நடைபெறும். நேற்றைய போட்டிகளுக்கு நடுவர்களாக ஆனந்த ஜெயஸ்கரன், எஸ். சசிதராஜ், இ.சிவலிங்கம், கு. முகுந்தன், கா.ஜெயசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.



நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் - பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜாவையும் காணலாம். (12)

# ஜனநாயக வழியிலான இந்தத் தேர்தல் மூலம் இனவாத அரசுக்கு தகுந்த பதில் கொடுப்போம்

## கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

ஜனநாயகத்துக்கு விரோதமாகத் தமிழ் மக்களை அடக்கி, யுத்தம் புரிந்த இலங்கை அரசிற்கும், சிங்கள தேசத்துக்கும், பொறுப்பு வாய்ந்த சர்வதேசத்துக்கும் ஜனநாயக வழியான இந்தத் தேர்தல்மூலம் சரியான ஓர் பதிலை நாம் கொடுக்கவேண்டும்.

அதற்காக நாம் சமாதானத்துக்கும் தயார், யுத்தத்துக்கும் தயார். முடிவு சிங்கள தேசத்திடமே எனக் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறினார். நேற்று முன்தினம் யாழ். மாவட்ட வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு - நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சியுடன், சமஷ்டி முறையிலான தீர்வுக்கு விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், காலம் காலமாக சிங்கள தேசம் யுத்தத்திலேயே நாட்டம் கொண்டுள்ளது. இன்று ஜனாதிபதியின் கட்சி - ஜே.வி.பி.யுடன் ஒப்பந்தம் செய்து, தேர்தலில் போட்டியிடுகின்றது. ஜே.வி.பி - நோர்வேயின் மத்தியஸ்தத்தை எதிர்த்தவர்கள். ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு காணப்படவேண்டும் எனத் தமிழர் பிரச்சினையை அணுகியவர்கள் - சுதந்திரக்கட்சியுடன் கூட்டமைத்து யுத்தத்தையே விரும்புகின்றனர்.

நாம் சிங்களக்கட்சிகளுக்கு, சிங்கள மக்களுக்கு, சர்வதேசத்துக்கு நாம் தெரிவிப்பது - ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு இல்லையேல், பிரிவது ஒன்றே வழி. இதனைச் சர்வதேசமும் உணர்ந்து ஏற்றுக்கொள்ளும். நாங்கள் சமாதானத்தின்மூலமாகவே தமிழ் மக்களின் பிரச்சினை தீரவேண்டும் என விரும்புகிறோம். 25 வருட யுத்தத்தில் இன்று மிஞ்சியது இடிபாடுகளும், இழப்புக்களுமே.



இன்றைய சர்வதேச நெருக்கடியில் ஓர் யுத்தம் தோன்ற முடியாது. எனினும், சிஹல உறுமய போனற இனவாத கட்சிகள்- புலிகளை யுத்தத்தின் மூலமே வெல்ல வேண்டும் எனக் கூறுகின்றனர்.

ஜே.வி.பி.கூறுகின்றது - புலிகளை இராணுவம் வெல்லமுடியாமைக்கு, இராணுவ ஊழலே காரணம் என்று. அதனால், பாதுகாப்பு அமைசசைத் தம்மிடம் தருமாறு கேட்கின்றனர். இது யுத்த சக்திகளின் கருத்து.

ஆனால், தமிழ் மக்கள் வலுவான ஓர் பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தினால், 20 பிரதிநிதித்துவத்துக்கு மேல் கிடைக்கவேண்டும். அதன்மூலம் எமது நியாயமானகோரிக்கையைச் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தலாம். தமிழ் கூட்டமைப்பின் வெற்றிக்கு நூறுவீதமான வாக்களிப்பு அவசியம். அதன்மூலமே எமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தலாம். இந்தத் தேர்தலானது - தமிழர் போராட்ட வரலாற்றில் இன்னோர் அடிநகர்த்தலாகும்.

எமது விடுதலைப் போராட்டம் சரியான பாதையில் செல்வதினால், அனைவரும் இந்தத் தேர்தல் காலத்தில் ஒன்றுபட்டு, அணிதிரண்டு எமது ஒன்றுமையையும், உரிமையையும் சர்வதேசத்துக்கும், சிங்கள தேசத்துக்கும் உணர்த்துவோம் என்றார். (205)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு 20 லட்சம் ரூபா உபகரணங்கள்

## கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வந்துசேர்ந்துள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட இந்த உபகரணங்கள் - கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் எடுத்துவரப்பட்டன. இவற்றைக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் கொழும்பிலிருந்து எடுத்துவந்தார்.

இந்த உபகரணங்களில் - தாய்லாந்து, இந்தியா, மலேசியா முதலான நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட - கதிரைகள், மேசைகள் மற்றும் உபகரணங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த மாதம் வடபகுதிநோக்கி எடுத்து வரப்பட்டு, வவுனியாவில் இறக்கிவிடப்பட்ட நிலையில் - வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் தேங்கிக் கிடந்த சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தொழில்நுட்பக் கல்லூரியின் உபகரணங்களும் எடுத்துவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# நெடுந்தீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சை விடுமுறை தினங்களில் நிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்டவைத்தியசாலையில் எதிர்வரும் காலங்களில் - ஞாயிறு விடுமுறை தினங்களில் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சைகள் இடம் பெறமாட்டாதென வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் ஞாயிறு விடுமுறை தினத்தில் அரைநேரம் வெளிநோயாளர் பிரிவு இயங்கிவந்தது. தற்போது புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள வைத்திய அதிகாரி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். (113)

# நெடுந்தீவு பஸ்சேவை நிறுத்தம் கால்நடையில் நாளாந்த கருமம்

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவந்த வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து, கடந்த 20 ஆம் திகதி முதல் திருத்த வேலை காரணமாகச் சேவையில் ஈடுபடவில்லை.

பேருந்து சேவையை நம்பி தொலைதூரங்களில் இருந்து வரும் பயணிகள் - படகில் வந்து கால்நடையாகச் சென்று வருவதை காணக்கூடியதாக உள்ளது.

பேருந்திற்கான ரயர் மாற்றம் செய்யவேண்டியுள்ளதாகவும், இது தொடர்பாக யாழ் - டிப்போவுக்கு அறிவித்துள்ளதாகவும் தகவல் கிடைத்தபோதும், இதுவரைக்கும் ரயர் மாற்றம் செய்ய எவரும் யாழ் நகரிலிருந்து வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (113)

# தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதையே நாம் விரும்புகின்றோம்

## முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து சுதந்திரமாக வாழ்வதையே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்புகிறது.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.சுபியான் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்-

கடந்த மூன்று தினங்களுக்கு முன்புதான் யாழ்ப்பாணத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்வதாக முடிவெடுத்தோம். 1990 ஆம் ஆண்டு முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, அவர்கள் அகதி முகாம்களை நாடவேண்டியநிலை ஏற்பட்டது. இந்த நிலையில் எந்த அரசியல் தமிழ் தலைவர்களும் முஸ்லிம் மக்களைச் சந்திக்கவில்லை. தற்போது யாழ்.மாவட்டத்தில் 2 வீதமான முஸ்லிம் மக்களே வாழ்கின்றனர்.

முஸ்லிம் மக்கள் தொடர்பாக எந்தக்கட்சியும் பேசவில்லை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசே அவர்களை ஆதரித்தது. கூட்டமைப்பு எம்மைப் பற்றிப்பிடிக்க தற்போது தவறியுள்ளது.

நான் வேட்பு மனுத்தாக்கலை செய்துவிட்டு, உடன் பொற்பதி அரசியற்துறை அலுவலகத்துக்குச் சென்று, இளம்பருதியைச் சந்தித்து உரையாடினேன். எமது செயற்பாடுகள் தொடர்பாக அவரிடம் எடுத்துக் கூறினேன்.

நாம் தமிழர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் மதிக்கின்றோம்.

அவர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. தமிழர்களது உரிமைகளை ஏற்றுக்கொணட ஒரு கட்சி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸாகும். தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையைப் பேணவேணடும்.

நாம் சமாதானம் தொடர்வதை விட, நிலையான சமாதானத்தையே விரும்புகின்றோம். சகல இன மக்களும் ஒற்றுமையாக, சமாதானத்துடன் வாழவே விரும்புகின்றோம் எனவும் தெரிவித்தார்.

### அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னமணி பேபி றெஜினா என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும்.

# கொத்தியாலடி இந்து மயானத்தில் கழிவுகள் கொட்டுவதைத் தடைசெய்க

## உடுவில் பிரதேசசெயலருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கொத்தியாலடி இந்து மயானத்திற்கு அண்மையாக தற்போதுள்ள பிரதேசசபையினால், கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டுவருகின்றன. இதனை உடன் தடைசெய்யுமாறு இந்துமயான அபிவிருத்திச் சங்கம் - உடுவில் உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியையும், திலீபன் வீதியையும் இணைக்கின்ற வீதியிலேயே கழிவுபொருட்கள் கொட்டப்பட்டவருகின்றன. இதனால், விவசாயிகளும் பொதுமக்களும் இந்தப் பாதை ஊடாக போக்குவரத்து செயயமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அண்மையில் உள்ள மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கழிவுப்பொருட்களை இந்தப பகுதியில் கொட்டுவதைப் பிரதேசசபை தடைசெய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி இமையாணன் அருள்மிகு துவாளி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம்-இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் இடம் பெறவுள்ளது.

மார்ச் மாதம் 5 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும், கொடியிறக்கமும் நடைபெறும். (116)

### தேர்தல் கண்காணிப்பில் பவ்ரல் அமைப்பு

யாழ்.மாவட்ட தேர்தல் கண்காணிப்புப் பணியில் 'பவரல்' அமைபபு கடந்த திங்கள் முதல் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் தலா இரு கண்காணிப்பாளரை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பவ்ரல் அமைப்பின் மாவட்ட அலுவலகம் 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ளது. (111)

### மரத்தில் ஏறியவரை பாம்பு தீண்டியது

பனைமரத்தில் ஏறியவர் வட்டுக்குள் இருந்த பாம்பினால் கடியுண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இயற்றாலையில் இடம்பெற்றது. இந்ததச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் (வயது 49) என்பவரே பாம்பினால் கடியுண்டநிலையில், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (34)

### அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்.ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு-இலங்கை அதிபர் சேவை தரங்களைச் சேர்ந்தவர்களும், இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1 ஐச் சேர்த்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மாதிரி விண்ணபப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவர்கள் தமது விண்ணப்பங்களை 10.03.2004 ஆம் திகதிக்கு முன், உரியமுறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உலகின் பெரும்பான்மையான நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் போஷாக்கின்மையாலும், பட்டினியாலும் வாடித்துன்புறுகின்றனர். உலகளாவியரீதியில் இவ்வாறு போஷாக்கின்மையும், பட்டினியும் பரவலாகக் காணப்படுவதற்கு - பொதுவாகக் கூறப்படும் காரணங்கள் உண்மையானவைதானா? இல்லை என்கிறார்கள் இரு இளம் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். **Food First : Beyond the Myth of Scarcity** என்ற நூலில் பிரான்சிஸ் மூர்லாப்பும், ஜோஸப் கொல்லின்சும் உணவுப் பற்றாக்குறைக்குப் பொதுப்படையாகக் கூறப்படும் சில காரணங்களை ஆதாரபூர்வமாகப் பொய்ப்பித்துக் காட்டுகின்றார்கள். அந்த நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் கீழே,

# மக்கள் பட்டினி கிடக்கும் காரணந்தான் என்ன?

⇨ உணவும், நிலமும் அருமையாக இருப்பதனால் மக்கள் பட்டினி கிடக்கின்றனர்.

பற்றாக்குறைதான் பட்டினிக்கான காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? எழுபதுகளின் உணவுப் பிரசசினையின்போதுகூட, முழு உலகினையும் போஷிக்கப் போதியளவு



உணவு இருந்தது. ஐக்கிய அமெரிக்க உணவு இறக்குமதியில், 40 சதவீதம் வளர்முக நாடுகளிலிருந்தே வருகின்றன. மாலியில் 1966-1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பருத்தி உற்பத்தி 400 சதவீதத்தால் அதிகரித்தது.

ஐரோப்பாவின் கால்நடைகளுக்காக ஏற்றுமதி செய்யப்படும் நிலக்கடலையின் உற்பத்தி 70 சதவீதத்தால் அதிகரித்தது. பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியால் வாடிய அதே வேளையில், ஏற்றுமதிச் சந்தைக்கான அரிசி உற்பத்தியிலும் அதிகரிப்பு ஏற்பட்டது. எனவே, விவசாய உற்பத்திக் குறைவினால்தான் மக்கள் பட்டினி கிடக்கின்றார்கள் என்று எப்படிக் கூற முடியும்.

நிலம் அருமையாக இருப்பது பட்டினிக்கான ஒரு காரணம் என்று கூற முடியாது. ஏனெனில், மத்திய அமெரிக்காவிலும், கரிபியன் நாடுகளிலும் (70 சதவீதமான சிறுவர்கள் போஷாக்கின்மையால் வாடும்போது) விவசாய நிலப்பரப்பில் மிகச்செழிப்பான அரைவாசிப்பகுதியில் ஏற்றுமதிக்கான பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

⇨ உலகில் மிகக் கூடுதலான மக்கள் வாழ்கிறார்கள். உலக சனத்தொகையில் ஏற்படும் தீவிர அதிகரிப்பு உணவுப் பற்றாக் குறையை ஏற்படுத்துகின்றது.

'கூடுதலான மக்கள்' இப்போது பசி ஏற்படக் காரணமாக இருப்பின், விவசாய நிலத்தின் தலா ஏக்கருக்கு பெருந்தொகையான மக்கள் வாழும், நாடுகளில் பட்டினி ஏற்படவேண்டும். ஆனால், அவ்வாறானதொரு நிலைமை உலகில் இல்லை. உதாரணமாக சீனாவில் ஒருவருக்கான விவசாய நிலப்பரப்பு இந்தியாவின் அளவைவிடவும அரைவாசியானதாகும். ஆனால், 25 வருடத்துக்கும் குறைந்த காலகட்டத்தில் சீனா போஷாக்குக் குறையை முற்றாக ஒழித்துள்ளது.

தலா நபருக்கான விவசாய நிலப்பரப்பு அதிகமாகக் காணப்படும் பல நாடுகளிலேயே பட்டினியும் நிலவுகின்றது. பொலிவியாவில் தலா நபருக்கான விவசாய நிலப்பரப்பு 11/2 ஏக்கருக்கும் அதிகமாகும். அதாவது, பிரான்சின் அளவைவிடக் கூடுதலானதாகும். ஆனால், பொலிவியர்களைப் பொறுத்தவரையில் பட்டினி கிடப்பதென்பது ஓர் அன்றாடச் சம்பவமாகிவிட்டது. பிரேஸிலின் தலா நபர் விவசாய நிலப்பரப்பைவிட ஐக்கிய அமெரிக்காவின் நிலப்பரப்பு குறைவானது.

போஷாக்குக் குறைவால் பெருந்தொகையான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் மெக்சிக்கோவிலும், பட்டினியை முற்றாக ஒழித்துக்கட்டியிருக்கும் கியூபாவினதும் நிலைமை இதுபோன்றதே. பட்டினியும், சனத்தொகை அதிகரிப்பும் ஒரே நோயின் இரு அடையாளங்களாகும். அதாவது, தேசிய உற்பத்தி, மூலவளங்கள் சிறுதொகையினரின் ஏகபோகத்துக்குட்பட்டிருப்பதனால், பெருந்தொகையானோர் வறுமையால் வாடுவது தவிர்க்கமுடியாததாகும்.

⇨ அதிக உணவு உற்பத்தியில் முழுக்கவனத்தையும் செலுத்தினால் பசி தானாகவே அகலும்.

பற்றாக்குறை - பட்டினிப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளதென்றால், அதற்கான தீர்வு மிகவும் சுலபமானதாகும்.

உற்பத்தியைப் பாரியளவில் அதிகரித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும். எனவே, கடந்த 30 வருட காலமாக 'பட்டினி ஒழிப்புப் போரின்' பிரதான குவிமையமாகப் புது தொழில் நுட்பங்கள் இருந்து வந்துள்ளன. அரசாங்கங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும், பல்தேசிய நிறுவனங்களும் - பாரிய நீர்பாசனத்திட்டங்கள், இரசாயனப்பசளைகள், களை கொல்லிகள், இயந்திரங்கள், புதுரக விதைகள் போன்றவற்றின் மூலமாக விவசாயத்தை நவீன மயப்படுத்தி, கூடிய உணவு உற்பத்தியைப் பெறுவதில் தம் முழுக்கவனததையும் செலுத்திவந்துள்ளன. ஆயினும், இந்தத் தொழில்நுட்பங்கள் யாவும் செல்வம், கடன் பெறும் தகைமை அரசியல செல்வாக்கு ஆகியவற்றைப் பெற்றிருக்கும் சிறுதொகையினருக்கு நன்மை பயக்கின்றன.

மேலும், விவசாயம்- இலாபம் தரும் ஒரு தொழிலாக மாறும் பட்சத்தில், நகர் சார்ந்த மேட்டுக்குடியினரும், புதிய விவசாயிகளும் விவசாய நிலங்களை வாங்குகின்றனர். போட்டி காரணமாகப் பெறுமதி அதிகரிக்கின்றது. உதாரணமாக - இந்தியாவின் 'பசுமைப் புரட்சி' பிரதேசங்களில் நிலத்தின் பெறுமதி நான்கு, ஐந்து மடங்காக அதிகரித்து, கூடிய வாடகை காரணமாக உழவர்கள் நிலம் அற்றவர்களாக மாறுகின்றனர். இலாபம் கூடிச்செல்லும் போது, பணம் படைத்தோர் சிறு நிலத் துண்டுகளையும் வாங்குகின்றனர். இதனால், உணவு உற்பத்தி வளங்களின் கட்டுப்பாடு - சிறுதொகையினரின் கைகளில் சிக்கிவருகின்றது.

⇨ அதிக உணவைப் பெற வேண்டுமாயின் - வறிய உலகு, பெருமளவில் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கும் பண்ணையாளர்களில் தங்கியிருக்கவேண்டும்.

அரசாங்கங்களும், சர்வதேச கடன வழங்கும் தாபனங்களும்- சிறு விவசாயியை விடுத்து, பெரிய நிலச்சுவாந்தர்களிலேயே அதிக நம்பிக்கை வைத்துள்ளன. அவர்களால் மட்டுமே துரிதகதியில் கூடியளவு உணவுற்பத்தியை மேற்கொள்ளமுடியும் என்று எண்ணப்பட்டு வருகின்றது. ஆயினும் ஆர்ஜென்டீனா, பிரேஸில், கொலம்பியா, ஈக்குவாடர், கௌதமாலா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், சிறுதுண்டு நிலங்கள் - பெரிய பண்ணைகளைவிட 3 மடங்கிலிருந்து 14 மடங்குவரை அதிக உற்பத்தி ஆற்றல் பெற்றுள்ளன என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன. தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கத் தரவுகள் இதனை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

சிறு விவசாயிகள் தம் நிலத்தின் வருமானத்திலேயே நம்பியிருக்கிறார்கள். எனவே, முடியுமான அளவு கூடுதலாக உற்பத்தி செய்வதிலேயே அவர்களது கவனம் செல்கிறது. கிராமப் பிரதேசங்களில் வாழும் பெருந்தொகையான மககள் - உணவைப் பணம் கொடுத்து வாங்கமுடியாத நிலையிலிருக்கின்றனர். எனவே, பாரிய உற்பத்தியாளர்கள் - நகர் சார்ந்த மேட்டுக்குடியினரின் நகர்வுக்காகவும், ஏற்றுமதி சந்தைக்காகவும் உற்பத்தி செய்கின்றனர்.

ஆ-ரெ

## தொழில் வங்கி



| நிறுவனம் | ஆடை உற்பத்தி நிறுவனம் | ஆடை உற்பத்தி தொழில் நிறுவனம் |
|---|---|---|
| வெற்றிடம் | தொழிற்சாலை நிர்வாகி | உற்பத்தி நிர்வாகி |
| அடிப்படைத் தகுதி | ஆடை உற்பத்தித் தொழிலில் ஐந்து ஆண்டுகள் அனுபவம் | 3 ஆண்டுகள் உற்பத்தி, நிர்வாகியாகக் கடமையாற்றியிருத்தல். 5 ஆண்டுகள் உதவியாளர் உற்பத்தி நிர்வாகியாகக் கடமையாற்றிய அனுபவம் |
| | ஆடைகளின் நிலையை சரி பார்க்கும் பொறுப்பாளர் | 5 வருட ஆடை தயாரிக்கும் தொழில் அனுபவம் |
| | தரக்கட்டுப்பாட்டாளர் | 3 வருட ஆடை தொழிலில் மேற்பார்வையாளராக அனுபவம் |
| | மேற்பார்வையாளர் | 3 வருட அனுபவம் |
| | இயந்திரப் பாதுகாப்பாளர் | 5 வருட அனுபவம் |
| | பற்றன்கள் தயாரிப்பவர் | 5 வருட அனுபவம் |
| | | |
| விண்ணப்ப முடிவு திகதி | 30.02.2004 | 30.02.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 70/= | 40/= | 40/= | 40/= | 40/= | 50/= |
| வெண்டிக்காய் | 15/= | 20/= | 20/= | 20/= | 30/= | 20/= | 25/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 40/= | 50/= | 40/= | 25/= | 40/= | 40/= | 40/= | 45/= |
| கத்தரிக்காய் | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= | 40/= | 40/= | 35/= |
| பாகற்காய் | 20/= | 40/= | 50/= | 25/= | 40/= | 30/= | 40/= | 50/= |
| கரட் | 30/= | 40/= | 40/= | 35/= | 35/= | 30/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 15/= | 20/= | 30/= | 10/= | 15/= | 20/= | 20/= | 25/= |
| முருங்கைக்காய் | 60/= | 100/= | 100/= | 90/= | 130/= | 70/= | 30/= | 200/= |
| வெங்காயம் | 25/= | 30/= | 25/= | 25/= | 30= | 25/= | 30/= | 35/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 50/= | 40/= | 30/= | 40/= | 35/= | 40/= |

## வாரம் ஒரு சிறுதொழில்

### இஞ்சி ஜாம்

நார் பிடிக்காத நல்ல சதைப்பற்றுள்ள இஞ்சி 300 கிராமை எடுத்து, அதன் மேலுள்ள பழுபபு நிறமான தோலைச் சுரண்டி எடுத்து, சுத்தமான கல்லுரலில்போட்டு நன்றாக இடித்து பின்னர், நன்கு அரைத்து எடுக்கவேண்டும். ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, 1 ரம்பிளர் தண்ணீர்விட்டு, 400 கிராம் சீனியை அதில்போட்டுக் காய்ச்சி, பாகுபோல் வந்ததும் ஒரு தேக்கரண்டி கேசரிப்பவுடரைக் கலந்ததும் மஞ்சள் நிறமாக வரும். சக்கரை பாகுப்பதமாக வந்ததும், அரைத்து வைத்திருக்கும் இஞ்சியைப்போட்டு நன்றாகக் கிளறிக்கொண்டிருக்கவேண்டும். இஞ்சி வெந்து லேகியப் பதத்துக்கு வந்ததுடன், இறக்கி ஆறவிடவேண்டும். ஆறியபின் கரண்டியினால் எடுத்து, போத்தல்களில் அடைத்து, உடனேயே மூடி, அழகிய லேபிள்களை ஒட்டி விற்பனைக்கு அனுப்பலாம்.

இது ஒரு நல்ல மணமுள்ள அருமையான ஜாம். தினசரி உணவுடன் இந்த ஜாமையும் சேர்த்து உண்டால், உணவு விரைவில் ஜீரணமாகும். பித்தத் தேகமுள்ளவர்களுக்கு இது சிறந்த மருந்தாகும்.




# வங்கியில் முதலீடு செய்வதைவிட காப்புறுதியில் இரண்டுமடங்கு இலாபமுண்டு

வரையறுக்கப்பட்ட காப்புறுதியின் அகில அதிசிறந்த முகவர் அப்புத்துரை சிவகாந்தா என்பவரை தொழில் மலருக்காகச் சந்திக்கச் சென்றபோது... சென்.ஜோன்ஸ் பாடசாலைக்கு முன்னேயுள்ள மரநிழலின்கீழ் நிறுத்தப் பட்டிருந்த வாகனத்தின் உள்ளே இருந்தபடி எங்களை வரவேற்றார்.

தன்னுடைய தொழிலும் அதில் ஏற்பட்ட திருப்தி பற்றியும் சொல்ல ஆரம்பித்தார்.

கொழும்பில் - லண்டன் ஐ.ஏ.பி படித்துவிட்டு, தோற் பொருள் உற்பத்திசெய்யும் தனியார் நிறுவனம் ஒன்றில் உதவிக் கணக்காளராக ஒருவருடம் பணிபுரிந்தேன். அதன் படி நானே தனியாக ஒருதோல்பொருள் உற்பத்திசெய்யும் கம்பனியினை ஆரம்பித்து, அதன்மூலம் உற்பத்தி செய் யும் பொருட்களை விற்பனை செய்துவந்தேன். 1981 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தினால் எனது தொழிற்சாலை இனக கலவரக்காரர்களால் தீமூட்டி அழிக்கப்பட்டது.

இதனால் எனது சொத்துக்களை இழந்து வெறுமையாக எனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டேன். யாழ்ப்பாணத்தில் சேவ்ரி கம்பனியில் யாழ் - கொழும்பு போக்குவரத்து சேவையில் ஒரு சாரதியாகப் பணிபுரிந்தேன். சிறந்தமுறையில் வாகனத்திற்கு பாதுகாப்பும், மக்களுக்கு பாதுகாப்பாகவும் வாகனம் ஓடிவந்ததனால், நல்ல பெயரினை எடுத்தேன். இதனால் எனக்குகிடைத்த பெயர் 'சேவ்ரி சிவா' இந்தப்பெயரால் எல்லோராலும் செல்லமாக அழைக் கப்பட்டேன்.

இந்தக் கம்பனியிலும் மூன்று வருடங்கள்தான் தொடர்ந்து சாரதியாக தொழில் புரியவேண்டியிருந்தது. பாதை மூடி யதால் இந்தக் கம்பனியினை மூடிவிட்டார்கள். சேவ்ரிக் கம்பனியினை நானே தொடர்ந்து நடத்தினேன். யாழ் கொழும்பு போக்குவரத்துச் சேவைதான் தடைப்பட்டது. ஆனால், பாடசாலை மாணவர்களுக்காக இதே பெயரில் போக்கு வரத்துச்சேவையினை ஆரம்பித்தேன். வட்டுக்கோட்டையிலி ருந்து, கச்சேரிவரை உள்ள பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு ஒவ்வொருநாளும் போய்வரும்போது, பல அனுபவங்களைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. எப்படி அதனை எல்லாம் இலகுவாக நிறைவேற்றினேன் என்பது எனக்கே தெரியவில்லை.

இந்திய இராணுவம் இருந்த காலப்பகுதியில் - ஒருநாள் மாணவர்களை பாடசாலைக்கு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வரும்போது, யாழ்.நகரில் குண்டு ஒன்று வெடித்தது. இதனால், யாழ்.நகரினை சுற்றிவளைத்தது இந்திய இராணுவம். உள்ளே யுள்ள மக்களை நகரிற்குவெளியே போகவிடாமலும், வெளியே உள்ள மக்களை நகரிற்கு உள்ளே வரவிடாமலும் தடுத்து வைத்திருந்தனர். நானும் வாகனத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்களும் நகரிற்குள் மாட்டிவிட என்ன செய்வது, எங்கே கொண்டுபோய் மாணவர் களை இறக்குவது என்றே எனக்கு தெரியா மல் இரண்டு மணித்தியாலங்கள் நகருக் குள்ளே சுற்றித் சுற்றித் திரிந்து, பின்பு இந்திய இராணுவ உயரதிகாரியிடம் அனுமதிபெற்று நகரிற்கு வெளியே வரவேண்டியிருந்தது. பின்பு மாணவர்களை அவர்களுடைய வீட்டிற்குக் கொண்டு சென்று இறக்கிவிட்டேன்.

இதேபோல் நான் இலங்கை இராணுவத்தினரின் காலப் பகுதியில் ஏற்பட்ட அனுபவம், ஒன்று மாணவர்களை ஏற்றிக் கொண்டு போகும்போது, உலங்குவானூர்தி எனது வாகனத் தினை துரத்தித் துரத்திச்சுட்டது. நான் ஒருவாறு நிதானமாக வாகனத்தை ஓட்டி பாடசாலைக்குக் கொண்டுபோய் மாணவர் களைப் பாதுகாப்பாக இறக்கினேன். இது என்னால் மறக்க முடியாத சம்பவம்.

அன்று நான் பாடசாலைக்கு ஏற்றிக்கொண்டுபோன மாண வர்களின் பிள்ளைகளையும் இன்று எனது வாகனத்தில் ஏற்றிக கொண்டுபோகும்போது, எனக்கு மனதில் சந்தோஷம் ஏற்படும். இரண்டு தலைமுறைகளை எனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்வதால் எனக்கு மனத்திருப்தி ஏற்பட்டிருக்கின்றது.

பாடசாலை சேவைதான் எனக்குக் காப்புறுதித் தொழில் மேல் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதனால் என்னை எல்லா மாணவர்களின் பெற்றோர்களும் வரவேற்றதனால் 1999 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தராகப் பணிபுரிந்தேன். வெளித்தொடர்புகள் அதிகமாகவே இருந்ததனால் நான் இந்தத் தொழிலையும் தெரிவுசெய்தேன்.

ஆயுட் காப்புறுதியில் நிறைய அங்கத்தவர்களைச் சேர்த் திருக்கிறேன். ஆயுட் காப்புறுதி நான்கு தசாப்பதங்களைத் தாண்டி காப்புறுதியின் முன்னோடியாகத் திகழந்தது. நாடு முழுவதும் 75 கிளைகள் உள்ளன. ஆயுட் காப்புறுதிமூலம் பரந்தளவு பாதுகாப்பு கிடைக்கிறது. தாமதமின்றி நஷ்ட ஈட்டினை மக்களுக்கு வழங்குகின்றது. குறைந்த கட்டணத்தில் கூடிய நன்மையும் கிடைக்கிறது.

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏறத்தாள 44 வகையான ஆயுட் காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை ஒவ்வொன்றும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் வரையறுக் கப்பட்டுள்ளன.



ஆயுட் காப்புறுதியில், யாழ்ப்பாணத்தில் இருந்து 300 பேர்களை அங்கத்தவர்களாக இணைத்திருக்கிறேன். வங்கி யில் முதலீடு செய்வதைவிட, காப்புறுதியில் முதலீடு செய்வதால் இரண்டு மடங்கு இலாபம் கிடைக்கிறது. அதாவது இப்போதைய வங்கி வட்டி வீதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு இலாபமாகும். உயிர் இழப்பீடு முழுவதுமாக கொடுக் கப்படுகிறது. சமீபத்தில் ஆயுட்காப்புறுதி முதலீடாக 80,000 ரூபா பணத்தினை முதலீடுசெய்த ஒருவர் இறந்துவிட்டார். அவருக்கு நஷ்டஈடாக 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கையில் காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தர்கள் 12 ஆயிரம் பேர்கள் உள்ளனர். இவர்களுள் 50 பேர் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்கள். வெளிக்கள உத்தியோகத்தர் களில் 12 ஆயிரம் பேர்களில் முதலாவதாக நான் இருக்கிறேன்.

காப்புறுதியில் யாழ்.மக்கள் கூடுதலான ஆர்வம் காட்டத் தொடங்கிவிட்டார்கள். இலாபம் அதிகமாகவுள்ளதால் காப் புறுதிச் சந்தையில் இலகுவாகக் காணப்படுகின்றது.

கடின உழைப்பினால் நான் அகில இலங்கையில் ஒரு பெயரினை எடுக்கக்கூடியதாக இருந்தது. பிறருடன் பழகிய தன்மை, நம்பிக்கையை வெல்வது போன்ற செயற்பாட்டினால் தான் இதனைச் சாதிக்கக்கூடியதாக இருந்தது.

அதாவது, **FIED OFFICERES A WARD PRESENTATION CEREMONY 2002** இல் கிடைத்தது. சிங்கப்பூர் செல்வதற்கான 6 நாள் விசாவும் வழங்கப்பட்டது. தன்னுடைய இரு படி வங்களாக தொழிலில் ஏற்பட்ட திருப்தியில் கிடைத்த பரிசும் பொருளும் மகிழ்ச்சியடைய வைத்தது எனக்கூறி தனது செவ்வியை நிறைவு செய்தார்.

நேர்காணல் ~ பூ.நகுலன்,செல்வா

## உலகின் விலங்கு வேளாண்மை



மனிதன் மிருகங்களை நல்லமுறையில் பயன்படுத்திப் பயன் பெறும் பொருளாதார நடவடிக்கையே விலங்கு வோளாண்மை எனப்படுகின்றது. ஆடு, மாடு, செம்மறிஆடு, பன்றி, கோழி, பட்டுப்பூச்சி என்பன விலங்கு வோளாண் மையினுள் அடங்கும் உயிரினங்கள்

1. இறைச்சிக்காக ஆடு, மாடு, பன்றி, என்பன பெருந் தொகையாக மேலைத்தேச நாடுகளில் வளர்க்கப்படுகின் றன.

2. உழவிற்காகவும் வண்டிகளை இழுப்பதற்காகவும் சில நாடுகளில் மாடுகள் பேணி வளர்க்கப்படுகின்றன.

3. முட்டைகளைப் பெறுவதற்காக கோழிகள் ஒவ் வொரு நாடுகளிலும் பெருந்தொகையில் வளர்க்கப்படு கின்றன.

4. கம்பளி மயிரைப் பெறுவதற்காகச் சில நாடுகள் செம்மறி ஆடுகளை வளர்க்கின்றன.

5. பாற்பண்ணை விளைவுகளுக்காக சில நாடுகள் மாடுகளை வளர்த்துவருகின்றன.

6. பட்டு நூலிற்காகப் பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன எனவே, விலங்கு வேளாண்மை பல கார ணங்களுக்காக உலகில் நடைபெற்று வருகின்றது.

ஆடு, மாடு வோளாண்மை அயனவலயத்திலும், இடைவெப்ப வலயத்திலும் பரந்துகாணப்படுகின்றது. காட்டுப் பகுதிகள், பனிப்பாலை நிலங்கள், புல் வளராத பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலெல்லாம் ஆடு, மாடுகள் வளர்க்கப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவின் பிறேசில், ஆஜென்ரீனா, கொலம்பியா என்பவற்றிலும் மேற்கிந்திய தீவுகளிலும், ஐரோப்பாவில் பிரித்தானிய தீவுகள், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, டென்மார்க், சுவிற்சர்லாந்து, போலந்து முதலியவற்றிலும் முன்னைய சோவியற் சமவுடமைக் குடியரசின் ஐரோப்பிய ரஷ்யாவில் அதிகமாகவும், ஏனையவற்றில் பரவலாகவும், ஆபிரிக் காவில் எதியோப்பியா, கெனியா தங்கனிக்கா, தென்னா பிரிக்க யூனியன் என்பவற்றிலும், அவுஸ்ரேலியாவில் கிழக்குக் கரையோரத்திலும், நியூசிலாந்துத்தீவுகளிலும் அதிகமாக ஆடு, மாடுகள் வளர்க்கப்பட்டுவருகின்றன.

மாடுகள் - இந்தியா, ஜப்பான், சீனா முதலிலய கீழைத்தேச நாடுகளில் வண்டியிழுப்பதற்கும் உபயோ கிக்கப்பட்டு வருகின்றன. அஜென்ரீனா, கனடா, உருகுவே, பிறேசில், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து முதலிய நாடு களில் இறைச்சிக்காகவும் வளர்க்கப்பட்டு வருகின்றன. டென்மார்க் , பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளில் பாற்பண்ணை விளைவுகளுக்காக வளர்க்கப்பட்டு வரு கின்றன.

# பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை செய்வோர்

ஓரிடத்தில் இருக்கின்ற காடுகளை வெட்டிக்கொளுத்தி, சாம்பலைப் பசளையாகக்கொண்டு, மழையை நம்பி சிறு தானியங்களையும், காய்கறிகளையும் செய்கைபண்ணும் பயிர்ச்செய்கையைப் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை என்பர். இதில் பயிர்கள் மாறுவதில்லை, இந்தப் பயிர்ச்செய்கை பெரும்பாலும் அயன வலயத்தில் நடைபெற்றுவருகின்றது. பயிர்ச் செய்கை முறைகளில் மிகவும் பிற்போக்கான ஒரு பயிர்ச் செய்கை முறை இதுவாகும். மத்திய அமெரிக்காவில் - மெக்சிக்கோ, தென்னமெரிக்காவில் - அமேசன், பிறேசிலியப் பகுதிகள், மத்திய ஆபிரிக்காவின் - ஹொங்ஹொங் பிரதேசம், தென் கிழக்காசியாவில் - இலங்கை, இந்தோனேசியா, மலாயா, பிலிப்பைன்ஸ்தீவுகள் ஆகியவற்றில் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை முறை நடைபெற்று வருகின்றது.

அமெரிக்க, ஆபிரிக்கப்பகுதிகளில் இந்தப் பயிர்ச்செய் கையை 'மில்பா' என்பர். கிழக்கிந்தியத் தீவுகளில் 'லடாங்' என்பர். பிலிப்பைன்சில் 'டௌங்கியா' என்பர். இலங்கையில் 'சேனைப்பயிர்'செய்கை என்பர்.

வரட்சிக் காலத்தில் காடுகளை வெட்டி விழுத்துவர். அவை காய்ந்ததும் தீயிட்டுக் கொழுத்துவர். மழை பெய்ததும் நிலத்தைக் கிளறி அல்லது கொழுத்தி சிறு தானியங்களையும் நெல், சோளம், காய்கறி, கிழங்குவகை என்பவற்றைப் பயிரிடுவர். இது மழையை முற்றாக நம்பிய பயிர்ச்செய்கையா கும். மழை பெய்யாதுவிட்டால் பயிர்கள் அழியும். மண்ணரிப்பும் கூடுதலாகநிகழும். ஓரிரு ஆண்டுகள் பயிர்செய்த பின்னர் மண்ணின் வளம் குறைவுற்றுப்போகும். அதன் பின்னர் இந்த நிலத்தைக் கைவிட்டுப் புதியதொரு நிலத்தைத் தேடிக் கொள்வர்.

பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை நடைபெறுகின்ற பிரதேசங்களில் நிரந்தரமான பயிர்ச்செய்கை முறை கைக்கொள்ளப்படாமைக்கு பின்வருவன காரணங்களாகும்.

1. பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பொதுவில் பிற்போக்கானவர்கள். நவீன பயிர்ச்செய்கை முறை களில் நாட்டமில்லாதவர்கள். காடுகளை அழித்துக் கொழுத்தி அதன் சாம்பலை இயற்கைப் பசளையாகக் கொண்டு பயிர் செய்வது அவர்களைப் பொறுத்தளவில் இலகுவானதாகவும், மலிவானதாகவும் இருக்கின்றது. அவர்கள் வறியவர்கள் ஆத லால் இவ்வாறான செலவற்ற செய்கைமுறைகள் அவர்களால் விரும்பப்படுகிறது.

2. வரண்ட பாகங்களிலேயே பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை நடைபெற்று வருகின்றது. வரண்ட பிரதேசங்களில் நிரந்தரமான நீர்ப்பாசன வாய்ப்புக்கள் குறைவு. உதாரணமாக - இலங்கை



யின் வரண்ட பிரதேசங்களில் சேனைப் பயிர்ச் செய்கை நடைபெற்றுவருவதற்கு, நீர்ப்பாசனப் பற்றாக்குறை ஒரு காரண மாகும். அதனால், மழையை நம்பிச் செய்கிற ஒரு பயிர்ச் செய்கையாகச் சேனைப்பயிர்ச்செய்கை விளங்குகின்றது.


3. இந்தப் பயிர்ச்செய்கை முறையில் மண்ணரிப்பு அதிகம். காடுகளை அழிப்பதனால் மண்ணரிப்பு நிகழ ஏதுவாகின்றது. தாவரப் போர்வை நீக்கப்பட்ட நிலத்தில் விழும் மழைநீர் தங்குதடையின்றி விழுவதுடன், தங்குதடையின்றி வெள்ளமாக ஓடுகிறது. இதனால் மண்ணரிப்பு நிகழ்கிறது. மண்ணரிப்பினால்- வளங்குறைந்ததும் மக்கள் அந்த நிலத்தைக் கைவிட நேரிடுகிறது.

4. மலேரியா போன்ற காட்டு நோய்கள், காட்டு விலங்குகள், போக்குவரத்து வசதிகளின்மை என்பவையும் இடப்பெயர்ச் சிக்குக் காரணங்களாகும்.

பெயர்ச்சி பயிர்ச்செய்கை பிற்போக்கான பயிர்ச்செய்கை முறையாகும். இந்தப் பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதிகளை அமைத்து மக்களை நிரந்தரமாகக் குடியேற்றி வாழவைக்க வேண்டும். மண்ணரிப்பு நிகழாது தடுக்க மண் பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ளவேண்டும். காடுகளைத் திட்டமிடப் படாத முறையில் அழிப்பதைத் தடுப்பதுடன், அழிக்கப்பட்ட இடங்களில் மீள்வளமாக்கம் செய்யவேண்டும். பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையின் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல் வதுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நிரந்தரமாக ஓரிடத்தில் வாழச்செய்தல் வேண்டும்.

## பொதுத் தேர்தல் - 2004

திரு.த.திரு



# வன்னி வாக்காளரின் ஜனநாயக உரிமை இந்தத்தேர்தலிலும் புறக்கணிக்கப்படுமா?

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள், இராணுவப் பகுதிகளிலேயே அமைக்கப்படவுள்ளதாகத் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. இன்றும் இதுகூட முடிவாகவில்லை.

இதன்படி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சித் தொகுதிக்கான வாக்களிப்பு நிலையங்கள் - முகமாலையின் படையரண் பகுதியிலும், வன்னி தேர்தல் மாவட்டம் மன்னார் தொகுதியின் மடு, மாந்தை மேற்கு பகுதிகளுக்கான வாக்களிப்பு நிலையங்கள்- உயிலங்குளம், மடு பகுதிகளிலும், முல்லைத்தீவு தொகுதி வவுனியா வடக்கு வாக்களிப்பு நிலையங்கள் - விளக்குவைத்த குளம் ஓமந்தை படைப்பகுதியிலும், மட்டக்களப்பில் அதன் நுழைவாயில் பகுதிகளிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரையான நேரத்தில் வாக்களிக்கப்படவேண்டும். கிளிநொச்சி தொகுதியில் - வெள்ளாங்குளம் வரையுள்ள கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து, மக்கள் வாக்களிக்க முகமாலைக்கு வரவேண்டும். முகமாலையிலிருந்து ஆகக் கூடுதல் தொலைவில் கிளிநொச்சியின் எல்லை வெள்ளாங்குளம். அதாவது கிளிநொச்சியின் முழங்காவில் தென் பகுதி வெள்ளாங்குளம் வரை உள்ளது. அதேபோல், மறுமுனையில் புன்னைநீராவியிலிருந்து முகமாலைக்கு மக்கள் செல்ல வேண்டும். முல்லைத்தீவின் விசுவமடுவிலிருந்து மக்கள் ஓமந்தைக்குச் செல்லவேண்டும்.

மக்கள் கணக்கெடுப்பின்படி - கிளிநொச்சியின் வாக்காளர் எண்ணிக்கை 57 ஆயிரத்து 925 ஆகும். முல்லைத்தீவு மாவட்டம் 52 ஆயிரத்து 547 ஆகும். மன்னாரின் 2 உதவி அரச அதிபர் பிரிவுகளில் 14 338 ஆகும்.

வடமராட்சி கிழக்கின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் 6000 ஆகும். இங்கு இராணுவ அரணுக்குள்ளேயே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார். இராணுவ அரணுக்குள்ளேயே என்றதும், இதுதொடர்பில் இராணுவத்துடன் ஆலோசிக்கப்பட்டது. இராணுவம் - அரணுக்குள் நுழையும் யாவரும் சோதனையிடப்பட்டே வாக்களிக்க அனுமதிக்கலாம் என உறுதிபடக் கூறியுள்ளது. இராணுவம் போர்நிறுத்த உடன்பாட்டை இதில் காட்டுகின்றது. நடுநிலைப்பகுதிக்குள் வாக்களிப்பு நிலையங்கள் வைப்பதாயின், அதனுள் ஆயுதங்களுடன் எவரும் நுழையநடமாட அனுமதியில்லை. வாக்குப்பெட்டிக்கு ஆயுதம் தாங்கிய சிறிலங்கா காவற்துறையினர் நிற்கவேண்டும் என்பது தேர்தல் சட்டம். ஆயுதமற்று காவற்துறை நிற்க வேண்டுமாயின் தேர்தல் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் எனச் சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதால், அதிக மக்கள் வாக்களிக்க முடியும். ஆனால், வன்னியில் நிலைமை அப்படியில்லை. அத்துடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னியின் இரு முழுமையான அரச அதிபர் பிரிவுகளில் இருந்தும் - வவுனியா, மன்னார், மாவட்டங்களில் மடு, மாந்தை மேற்கு, வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்தும், யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கிலிருந்தும் மக்கள் வாக்களிக்க வேண்டும். ஆனால், படையினரின் அரணுக்குள் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கு மணித்தியாலத்துக்கு 300 பேர் வீதம் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டால் நிலைமை எப்படி இருக்கும்..?

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாக்களிக்கும் வாக்காளர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| கிளிநொச்சி | - 57925 |
| முல்லைத்தீவு | - 52547 |
| மடு,மாந்தைமேற்கு | - 14338 |
| வவுனியா வடக்கு *(வவுனியாவின்சிலபகுதிகள்)* | - 2 5009 |
| வடமராட்சி கிழக்கு | - 6000 |

இங்கு இராணுவத்தினர் - தாம் வாக்காளர்களைச் சோதனையிட்டே அரணுள் அனுமதிக்கமுடியும் எனவும், மணித்தியாலத்துக்கு 300 பேரை மட்டுமே சோதனையிட முடியும் என்றும் கூறுகின்றனர். இதன்படி ஒரு நாளில் 2400 பேர் மட்டுமே வாக்களிக்கமுடியும். கிளிநொச்சியின் 57 ஆயிரத்து 925 வாக்காளர்களும், வடமராட்சிக் கிழக்கின் 6000 வாக்காளரும், முல்லைத்தீவின் 52 ஆயிரத்து 547 வாக்காளர்களும் எப்படி வாக்களிக்க முடியும். இரு தொகுதிகளிலும் 4800 வாக்காளர்களே வாக்களிக்கமுடியும்.

மட்டக்களப்பில் 9 சோதனை நிலையங்முகமாலையில் - கிளிநொச்சியின் 53, வடமராட்சி கிழக்கின் 6 ஐயும் சேர்த்து 59 வாக்களிப்பு நிலையங்களும், ஓமந்தையில்- 86 வாக்களிப்பு நிலையங்களும், உயிலங்குளத்தில் 12 வாக்களிப்பு நிலையங்களும், மடுவில் 3 நிலையங்களும் அமைக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 79 ஆயிரத்து 239 வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க 93 வாக்களிப்பு நிலையங்கள் வைக்கப்பட வேண்டும். ஆனால் அங்கு 9 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களே அமைக்கப்படவுள்ளன.

செங்கலடி கறுத்தப்பால படையரண் ஊடாக 8968 வாக்காளர்களும், வலையிறவு முன்னரண் அருகேயுள்ள வாக்களிப்பு நிலையத்தில் 15 ஆயிரத்து 188 வாக்காளரும், சந்திவெளித் துறை படையரண் ஊடாக 820 வாக்காளரும், கிரான்பாலம் அரண் ஊடாக 4865 வாக்காளர்களும், மாங்கேணி படையரண் ஊடாக 7586 வாக்காளரும், பட்டிருப்பு பாலம் படையரண் ஊடாக 12 ஆயிரத்து 416 வாக்காளரும், மண்டூர் அரண் ஊடாக 7457 வாக்காளரும் அம்பிலாந்துறை அரண் ஊடாக 8441 வாக்காளரும் நுழைந்து, 9 கொத்தணி நிலையங்களில் வாக்களிக்க வேண்டும்.

மட்டக்களப்பில் இதன்மூலம் வாக்களிப்பு கணிசமான அளவு இருக்கும். திருகோணமலை - மூதூர் கிழக்கிலும் வாக்களிப்பில் பெரிதாக நெருக்கடிகள் இல்லை. திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 15 000 வாக்காளர்கள் உள்ளனர். இங்கு 3 கொத்தணி வாக்காளர் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. ஆனால், வன்னியிலேயே சிக்கல்கள் இருக்கப் போகின்றன.

வன்னி தேர்தல் மாவட்ட, மன்னார் தேர்தல் தொகுதியில் - மடுவிலேயே 3 நிலையங்களுக்குரிய கொத்தணி வாக்களிப்பு நிலையம் - மடு படையரணிலும், மாந்தை மேற்கின் 12 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய கொத்தணி நிலையம் - உயிலங்குளத்திலும் அமையப்போகின்றன. வன்னி தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மொத்தம் 4 கொத்தணி நிலையங்களில் - 2 லட்சத்து 97 ஆயிரத்து 14 வாக்காளர்கள், 7 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையே வாக்களிக்க வேண்டும். இது எப்படிச் சாத்தியப்படும்?

2 லட்சத்து 97 ஆயிரத்து 14 வாக்குகளை முழுமையாக வழங்குவதற்கான ஜனநாயக மறுப்பு அரசினால் இடப்படுகின்றதா?

கடந்த தேர்தலில் வன்னிக்கான ஒரேயொரு நுழைவுப் பாதையாக இருந்த பிரமணாளங்குளச் சோதனை அரணில், கொத்தணி வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டும், எவரும் வாக்களிக்கப் படையினர் அனுமதி மறுத்தனர். இது குறித்து வாக்காளர் சிலர் வழக்குத்தாக்கல் செய்தனர். வாக்களிக்க மறித்தது அடிப்படை உரிமை மீறல் என சிறிலங்காவின் நீதிமன்றம் கூறியதைத் தவிர வேறேதும் நடக்கவில்லை

அதே போல் இந்த தேர்தலிலும் வன்னி வாக்காளர்கள் முழுமையாக வாக்களிக்க வாய்ப்புக்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இதுவும் அடிப்படை உரிமை மீறலே. ☆

## செய்திக் கட்டுரை

- செல்வா



# இந்தியாவும் ஈழத் தமிழர்களும்

இலங்கையின் வடபகுதியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக - இந்தியாவிற்கு படகுமூலம் ஏராளமான தமிழ் மக்கள் (அதாவது அறுபதாயிரம் பேர்வரை) இடம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். யுத்த பயம் காரணமாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு படகு ஏறியவர்களில்- கடலில் படகு கவிழ்ந்து பலர் இறந்தும் இருக்கிறார்கள். இலங்கைக் கடற்படையால் கைதாகி பலர் சிறைகளிலும் தவம் கிடக்கின்றனர். இவ்வளவு நெருக்கடிக்குள்ளும் தப்பித்து இந்தியா சென்றும் அவர்கள் அங்கேபடும் அவலங்கள் சொல்லிலடங்காது.

இராமமேஸ்வரப் பகுதியிலுள்ள தனுஷ்கோடி என்ற ஊரின் கரையில் இறக்கிவிட்டு படகோட்டிகள் திரும்பிவிடுவார்கள். இந்திய கடற்படைக்குத் தப்பி இவர்கள் திரும்பிச் செல்லாது விட்டால் பிடித்துச் சிறையில் அடைத்துவிடுவார்கள். கடற்கரையிலுள்ள எல்லைப் பகுதி சிறப்புக் காவறதுறையினரால் சோதனை செய்யப்பட்டு. பின்னர் தனுஷ்கோடியிலுள்ள காவறதுறைப் பணிமனைக்கு எல்லோரையும் ஒரு பேருந்தில் ஏற்றிச் செல்வார்கள்.

கடலால் வந்தவர்கள் எல்லோரின் விபரங்களையும் திரட்டி, எல்லோரின் பத்துவிரல்களையும் மை தொட்டுப் பதிவுசெய்த பின்னர், இராமேஸ்வரத்திலுள்ள இராமநாடு அகதிகள் மண்டப முகாமில் கொண்டு போய் விடுவார்கள். அங்கேயும் இதே கேள்விகள், விசாரணைகள், பதிவுகள் இடம்பெற்ற பின் -தடுப்பூசி போட்டு குடும்பப் பதிவு அட்டையினையும் கொடுத்து அவர்களுக்கு தங்குவதற்காக தொடர்வீட்டில் ஒரு அறையினைக் கொடுப்பார்கள்.

ஒரு மாதத்தில் பதினைந்து நாளுக்கு ஒரு தடவை ஒரு நபருக்கு - 75 ரூபாவும், மட்டுப்படுத்தப்பட்ட சீனி, மா, கல் அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களும் கொடுப்பார்கள். முகாமில் சுகாதார வசதிகள் இல்லாத மலசல கூடங்களும், அந்தப் பகுதியில் காணப்படுவதால் அங்கே தொடர்ந்து இருக்கமுடியாமல் வெளியேறி சென்னைக்கோ அல்லது திருச்சிக்கோ ஓரளவு வசதிபடைத்தவர்கள் சென்று விடுகிறார்கள். மண்டப முகாமில் இருந்து கொண்டு அனுமதியில்லாமல் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாது. ஆகையால் அனுமதி பெறாமலே சென்றுவிடுகின்றார்கள்.

சென்னையிலோ அல்லது திருச்சியிலோ தங்குவதென்றால், வாடகைக்கே பணம் அரைவாசி முடிந்து விடும். உறவினர்கள் வெளிநாடுகளில் இருப்பதால், அவர்கள்மூலம் பணம் கிடைப்பதால் பலரின் வாழ்க்கை நன்றாக இருக்கின்றது. வெளிநாடுகளில் உறவு இல்லாதவர்கள் ஏதாவது ஒரு வேலை செய்தால்தான் அங்கே வாழமுடியும்.

அந்தந்தப் பகுதியில் உள்ள காவல் பணிமனைகளில் பதிவு செய்தல் அவசியம். மண்டபமுகாமில் இருந்து அனுமதி இல்லாமல் வந்தவர்கள். பதிவுச் சான்றிதழ் வைத்திருந்தால் தான் எல்லா இடமும் போகமுடியும். ஆனால் நேரடியாகக் காவல் பணிமனைக்குச் சென்று பதிவுசெய்தல் என்பது முடியாதகாரியம். சான்றிதழ் எடுத்துக் கொடுக்கவென ஒவ்வொரு ஊருக்கும் முகவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒருவருக்கு - இந்தியப் பணத்தில் 1500 ரூபா கொடுக்க, முகவர் ஒரு தொகையினை எடுத்துவிட்டு காவல்றை உறுப்பினருக்கும் ஒரு தொகை கொடுத்துப் பதிவு செய்வார்கள்.

சென்னையின் பல பகுதிகளில் அதாவது மடிப்பாக்கம், விருகம்பாக்கம், வளசரவாக்கம், போரூர், திருவாண்மையூர், அண்ணாநகர், தாம்பரம் போன்ற பகுதிகளிலும், திருச்சியில் கே.கே.நகர் போன்ற பகுதிகளிலும் அதிகமான இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முகவரிடம் பணம் கொடுத்து போய்ச்சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள், போக முடியாமல் பெருந் தொகைப் பணத்தினைப் பறிகொடுத்தவர்களும் இருக்கின்றார்கள். வெளிநாடு செல்ல முற்பட்டபோது பிடிபட்டு சிறையிலும் பலர் இருக்கிறார்கள். இவ்வாறு இந்தியச் சிறைகளில் இருப்பது 750 பேர். இவர்களுள் சந்தேக நபர்கள் என்று, அதாவது புலிகளைச் சேர்ந்தவர்கள் என்று பலரும் அடங்குவார்கள். இப்படியாக தமிழ் நாட்டில் இளைஞர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கின்றது.

தமிழ் நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்தும் பலர் இருக்கிறார்கள். வெளிநாட்டு வசதி இல்லாதவர்கள், அதாவது முகாமில் இருப்பவர்களும் முகாமுக்கு வெளியே இருப்பவர்களும் கஷ்டமான பாரதூரமான வேலைகளை செய்து வாழ்க்கையை நகர்த்துகின்றார்கள்.

ஒரு தொழிற்சாலைக்கு - வண்டியில் மண் ஏற்றுதல், கல் ஏற்றுதல், மூட்டை தூக்குதல் போன்ற வேலைகளை ஆண்களும் மண் அரித்தல், கட்டடம் கட்டுவதற்கு கல் தூக்கிக் கொடுத்தல் போன்ற வேலைகளைப் பெண்களும் செய்துவருகின்றார்கள். பணம் இல்லாததால் இவர்கள் திரும்பி இலங்கைக்கு வரமுடியாமல் கஷ்ரப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டில் உறவினர்கள் உள்ளவர்கள் பணம்கொடுக்க - பலர் பலசரக்குக் கடைகள் அமைத்தும், தொலைபேசி நிலையங்கள் அமைத்தும், வாகனப் போக்குவரத்தினை மேற்கொண்டும், ஒளி அமைப்பு செய்தும், தையல் கடைகளை திறந்தும், நகைக் கடைகளைத் திறந்தும் வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

தமிழ் நாட்டுக் காவல்துறையினருக்கு பணத்தைக் காட்டினால் போதும், வாயைப் பிளந்து நிற்பார்கள். அந்தளவிற்கு லஞ்சம் அங்கே தாண்டவம் ஆடுகின்றது. எந்தவித குற்றமும் செய்யாமல் வசதிபடைக்காத மக்கள், இவர்களால் நிறையத் தடவைகள் தண்டனைக்கு உள்ளாகிவிடுகின்றார்கள். வசதிபடைத்த மக்கள் இவர்களைக் காலுக்குக் கீழே போட்டு வைத்திருக்கிறார்கள். தமிழரின் பண்டிகை நாட்களில் இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் வீடுகளுக்கு வந்து பணம் வாங்குவார்கள்.

**.....காவல்துறையினருக்குப் பணத்தைக் காட்டினால் போதும், வாயைப் பிளந்து நிற்பார்கள். அந்தளவிற்கு லஞ்சம் அங்கே தாண்டவம் ஆடுகின்றது. எந்தவித குற்றமும் செய்யாமல் வசதி படைக்காத மக்கள், இவர்களால் நிறையத் தடவைகள் தண்டனைக்கு உள்ளாகிவிடுகின்றார்கள். வசதிபடைத்த மக்கள்......**

நெற்றியின் குறுக்கே நீட்டாக குங்குமப்பொட்டு போட்டிருக்கும் இவர்கள் பார்ப்பனிய இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருப்பவர்கள். அநேகமாக இவர்களில் பலர் உளவுத்துறையைச் சேர்ந்தவர்கள். ஏனெனில், இலங்கைத் தமிழ் மக்கள கூடுதலாக வாழும் பகுதிகளில் இவர்களைக் கூடுதலாகக் காணலாம். ஏன் வருகின்றார்கள் என்றால், புலிகளைப் பிடிக்கவெனச் சொல்லி- ஒரு இளைஞர் தனியாக இருந்தால் போதும் அவரைப் பிடித்துப் பணம் பறித்து விட்டுவிட்டு விலகுவார்கள். பணம் கொடுக்காவிட்டால் அவ்வளவு தான் சிறையில் அடைத்துவிடுவார்கள். இதன்மூலம் பணம் சம்பாதித்த எத்தனை உளவுத் துறையினரும், காவற்துறையினரும் தமிழ் நாட்டில் இருக்கின்றார்கள்.

இளைஞர்கள் பலரின் வாழ்க்கை சீரழிந்து போகின்றது. சினிமாவைப் பார்த்தும், ஊர்களைச் சுற்றிப் பார்த்தும், வெளிநாட்டுக்குப் போவோம் என்ற நம்பிக்கையில் தமது வாழ்வின் பின்புலத்தை நினைக்காமல் மதுவினைப் பயன்படுத்தியும், நாகரிகமான வாழ்வு என்று எண்ணி அநாகரிகமாக நடந்துகொள்கின்றனர்.

இராமேஸ்வரத்தில் உள்ள மண்டப முகாமும், கும்முடிப் பூண்டி முகாமும், சேலம் முகாமும், மகா வள்ளிபுரத்திலுள்ள தட்டுவம்கொட்டி முகாமும், மதுரையிலுள்ள முகாமும் மூடப்பட்டு, அங்கிருக்கும் இலங்கையைச் சேர்ந்த அத்தனை தமிழ் அகதிகளும் திருப்பி அனுப்பப்படுவார்களாயின் அவர்களுக்கு மீண்டுமொரு புதுவாழ்வினை ஆரம்பிக்க வழிகிடைக்கும். ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு*
*இல்லைநன்று ஆகா வினை*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வதேச சமாதான சமூகத்தின் தேர்தல்கால அறிவுறுத்தல்கள்

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான - பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, முடிந்துவிட்ட நிலையில் மக்களின் வாக்குகளைப்பெறுவதற்கான பிரசார நடவடிக்கைகளும் மெல்ல மெல்ல ஆரம்பமாகிவிட்டன முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சர்வதேச சமூகத்தின் ஆழ்ந்த கவனிப்பை இந்தத் தேர்தல் பெற்றுள்ளமைதான் இதற்குரிய சிறப்பம்சமாகும்.

கடந்த பொதுத்தேர்தல் முடிவில் இலங்கையில் ஏற்பட்ட சமாதான போர்நிறுத்த சூழலை வரவேற்ற சர்வதேச சமூகமானது இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நியாயமானதுமான அரசியல் தீர்வொன்றினை அமைதிப் பேச்சுக்கள் முலம்ஏற்படுத்த தம்மாலான சகல உதவிகளையும் ஆதரவையும் வழங்க முன்வந்து, அது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தீவிரமாகச் செயற்பட்டமை அனைவரும் அறிந்த விடயம்

இலங்கையின் இரட்டையாட்சி நிலையானது, நாடாளுமன்ற ஆட்சிமுறையின் அடிப்படையில் சிறுபான்மை சமூகத்தவரின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு, நீதியான, குறிப்பாக அவர்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கக்கூடியதான தீர்வொன்றை முன்வைக்கும் மனவிருப்போ, அரசியல் பக்குவமோ கொண்டதாக இல்லாதபோதும், விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடனும், விட்டுக் கொடுப்புக்களுடனும், நேர்மையுடனான பொறுமையுடன், தம்மைப் பிணைத்துக்கொண்டதன் மூலம் தங்களின் சமாதானம் மீதான அக்கறையையும், அரசியல் தீர்வொன்றினை எட்டுவதற்கான பெருவிருப்பையும் தேசிய ரீதியில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியாலும்கூட கடந்த இரண்டாண்டு காலமாக நிரூபித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது சர்வதேச சமூகம் எதிர்பார்த்திராத ஒன்றாகும். சந்திரிகா தலைமையிலான அரசு மில்லியன் கணக்கிலான ரூபாய்களை செலவழித்து லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும், சமாதான விரோதிகளாகவும் காட்ட மேற்கொண்ட பிரசார உளவியல் நடவடிக்கைகள் மூலம் புலிகள் தொடர்பாகவும், தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாகவும் சர்வதேசமும் தமக்குள் உருவாக்கி வைத்திருந்த கருத்தியல் நிலைப்பாட்டின் பொய் வடிவமானது இந்த சமாதான நடிவடிக்கையின் மூலம் முற்றாகச் சிதைந்து, கலைந்து போனது வரலாற்று முக்கியத்துவமிக்க சம்பவமாகும்.

இந்த நிகழ்வு பேரினவாதிகள் கனவிற்கூட நினைத்திராத ஒன்றாகும். இந்நிலையில் சமாதான முன்னெடுப்புகள் பேரினவாத அரச பயங்கரவாதத்தின் கொடூர முகமானது உலகளாவிய ரீதயில் அம்பலப்படுத்தப்பட்டதன் விளைவே சமாதான முயற்சிகளுக்கு பேரினவாத சக்திகளால் ஏற்பட்ட தடையும், ஆட்சிக் கலைப்பும் புதிய பொதுத்தேர்தல் அறிவிப்பாகும்.

இதனையும் உலகம் இப்போது புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளமையின் வெளிப்பாடே பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் எச்சரிக்கையாகும்.

அதாவது, தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சித் தலைவர்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை பாதிக்காத வகையில் நடந்துகொள்ளவேண்டும் என்ற பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மைக் ஓ பிறெய்ன் அவர்களின் எச்சரிக்கைத் தொனியுடன் கூடிய அறிவிப்பானது - சமாதான எதிர்ப்பு சக்திகளுக்கு குறிப்பாக, சந்திரிகா தலைமையிலான கூட்டணி மற்றும் அவர்களின் ஆதரவுக் குழுக்கள், பேரினவாதக் கட்சிகள் போன்றவற்றிற்கு எச்சரிக்கையை உண்டுபண்ணும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், அவர்களின் எரிச்சலோ, ஆத்திரமோ அல்லது வேறு எந்த வகையிலான நிலைப்பாடுகளோ - கருத்தியல் வெளிப்பாடுகளோ அனைத்துமே சர்வதேச சமாதான ஆதரவு சக்திகளால் உன்னிப்பாக கவனிக்கப்படவே செய்கின்றது என்பதே உண்மையாகும்.


உண்மையில் இந்தத் தேர்தல் குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பானது சமாதான முயற்சிகளை குழப்பும் மற்றும் அவமதிக்கும் செயற்பாடுதான் என்பதை உலகம் நன்கு புரிந்துகொண்டுள்ளதை அண்மைக்கால நிகழ்வுகள் பலவும் உணர்த்தி நிற்கின்றன.

ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியின் வருகையும் அவர் தெரிவித்த கருத்துக்களும், அமெரிக்காவின் றச்சர்ட் ஆர்மிரேஜின் எச்சரிக்கையும், வொஷிங்ரன் மாநாட்டு அறிக்கையும் தற்போது பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் அறிவுறுத்தலும் இதற்கு சான்றாக உள்ளது.

இலங்கையின் சமாதானத்திற்கும் சுபீட்சமான எதிர்காலத்திற்கும் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு இறுதியான அரசியல் தீர்வொன்று அவசியம். ஆனாலும், இலங்கையின் அரசியற் கட்சிகள் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக முரணான கருத்துக்களை கொண்டுள்ளமையானது, திருப்திதரும் விடயமல்ல - என்ற பிரிட்டிஷ் அமைச்சரின் அறிவுறுத்தல் இந்தத் தேர்தல் சமயத்தில் சமாதான விரோத சக்திகளுக்கு சர்வதேச சமூகத்தில் இருந்துவரும் கண்டனக் குரலாகவும், உள்ளது எனலாம்.

ஆனால், இதையெல்லாம் இனவாதம் பீடித்த தென்பகுதித் தலைமைகள் பிரிந்துகொள்வார்களா என்பது சந்தேகம்தான்.

## நாடும் நடப்பும்




## வேலைவாய்ப்பு பணியக முன்னாள் தலைவர் வெளிநாடு செல்ல நிபந்தனையுடன் அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முன்னாள் தலைவர் சுசந்த பெர்னாண்டோவை- வெளிநாடு சென்றுவருவதற்கு கொழும்பு பிரதம நீதிவான் சரோசின் கோசல வீரவர்த்தன நிபந்தனையுடன் அனுமதிவழங்கினார்.

சுசந்த பெர்னாண்டோ மோசடி தொடர்பான வழக்கு ஒன்றின் பேரில் குற்றஞ்சாட்டப்பட்டவராவார்.

அவுஸ்ரேலியாவிலுள்ள இவரின் உறவினரின் திருமண வீடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகச் சட்டத்தரணி மூலம் நீதிமன்ற அனுமதியைக்கோரினார்.

இவரது விண்ணப்பத்தை பரிசீலித்த நீதிவான் - சந்தேகநபரை முப்பது இலட்சம் ரூபா பிணையில் செல்வதற்கு அனுமதித்தார்.

நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள அவருக்கு மீண்டும் கடவுச்சீட்டை வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரின் பிணைதொடர்பாக, 25 ஆயிரம் ரூபா மாதச் சம்பளம் பெறும் மூன்று ஊழியர்கள் சாட்சிக் கையொப்பம் இடவேண்டும் எனவும் நீதிவான் தெரிவித்தார்.

சுசந்த பெர்னாண்டோ ஏற்கனவே பல்வேறு ஊழல் குற்றஞ்சாட்டுக்களில் ஈடுபட்டு, சுமார் 3 கோடி ரூபா அரசாங்கச் சொத்தை மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டார்.

இதனை அடுத்து தனது பதவியை இராஜினாமா செய்துகொண்ட இவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவரின் கடவுச்சீட்டும் பறிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

## மணற்காடு, குடத்தனை பகுதிகளில் சவுக்கு மரம் வெட்டுவதைத் தடுக்கவும்

### அரச அதிபருக்கு கடிதம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனை பகுதிகளில் பாரிய சவுக்கு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதை தடைசெய்யுமாறு, யாழ்.அரசாங்க அதிபரை வடமராட்சி கிழக்கு வளம் பேணும் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாகச் சங்கம் அனுப்பிவைத்திருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குடத்தனை, மணற்காடு பகுதிகளின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்தோடு வளர்க்கப்பட்ட சவுக்கு மரங்கள், நாளுக்குநாள் விறகு வியாபாரிகளால் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் சவுக்குக்காடுகள் அழியும்நிலை உருவாகலாம் எனவும், குடத்தனையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அரசாங்க அதிபரிடம் - வளம் பேணும் சங்கம் இந்தச் சவுக்குமரங்கள் வெட்டுவதைத் தடைசெய்யுமாறு கோரியிருந்தோம். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கடந்த ஒரு வருட காலத்தில் 40 ஆயிரம் சவுக்கங்கன்றுகளை நாட்டி வந்திருக்கிறோம். 30 இற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக்கொண்டு 1 லட்சம் ரூபா செலவில் சவுக்கங்கன்றுகளை வளர்த்துவருகிறோம். தினமும் பாரிய சவுக்கு மரங்கள் அழிக்கப்பட்டுவருவதால், தொடர்ந்து சவுக்கு மரங்களின் நடுகையை நிறுத்தவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த விடயத்தில் தலையிட்டு உடனடியாக சவுக்கு மரங்கள் அழிக்கப்படுவதைத் தடைசெய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்

இதன் பிரதிகள் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் சிறப்புத்தளபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (17)

## படையினர் விடுவித்த பகுதிகளை துரிதமாக மக்கள் புனரமைப்பு

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட வீடுகள், கடைகள் என்பவற்றின் உரிமையாளர்கள், துரிதகதியில அவற்றின் திருத்த வேலைகளை மேற்கொண்டுவருவதை காணக்கூடியதாகவுள்ளது. யாழ். பிறவுண் வீதி கலட்டிச் சந்தியில் அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கடைகளை அவற்றின் உரிமையாளர்கள் புனரமைத்துவருகின்றனர்.

அதேவேளை, இந்தப் பகுதிகளில்- மிதிவெடி அபாயம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மிதிவெடி அகற்றும் பணிகளிலும் ஹலோட் ரஸ்ட் நிறுவனம் செயற்பட்டுவருகின்றது. இப்பகுதியில் புனரமைக்கப்படும் வீடுகளில் மக்கள் விரைவாகக் குடியேறவுள்ளதுடன், வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவுள்ளனர். (94)

## நுண்கருத்திட்ட ஒதுக்கீட்டின்மூலம் உதவிபெற விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நுண்கருத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் உதவிகள் பெறவிரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்க நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

கடந்த 3 வருடங்களுக்கு மேலான நெடுந்தீவிலுள்ள கடற்றொழிலாளர்கள் அந்த நுண்கருத்திட்ட நிதியில் இருந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை பெற்று அதன் பெறுமதியை தவணை அடிப்படையில் செலுத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாகவே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச செலயகம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு இந்நிதி வழங்கப்பட்டு அவர்கள் மூலமாக பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் இன்று கொழும்புக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்த பத்து வேட்புமனுக்களும் இன்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்ட தேர்தலில் போட்டியிடுவதற்கு எட்டு அரசியற்கட்சிகளும், இரண்டு சுயேட்சை குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இந்த வேட்புமனுக்கள் யாவும் யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளாரிடம் இருந்து தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதேவேளை, வேறு தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களும் இன்று தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தேர்தல் மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XV - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இங்கே தாயகத்தில் இருக் கும் அந்த நபரின் பெற்றோர் - தங்களுடைய பிள்ளையின் பொய்யை உணராது, மற்றவர்களுக்கு காட்டி பெருமையடித்துக் கொள்வார்கள். 'என்ன உங்கட மகன் எச்சிக் கோப்பை கழுவுறானாம்?' 'கண்ட கண்ட சாதிக்காரர்களோட ஒண்டா இருக்கிறானாம், மாட்டிறைச்சி, பண்டிறைச்சி எல்லாம் தின்னுறானாம்' என்று நக்கல் வேறு அடிப்பார்கள்.

மற்றப் பெற்றோர் - உடனே தங்கள் மகனைப் பேசியும், அவனுக்கு அறிவுரை கூறியும் எட்டுப் பத்துப் பக்கத்தில் மடல் அனுப்புவார்கள். அந்த மடலின் இறுதியில், 'நீ கண்ட கண்டவையோட ஒண்டா இருக்கிறதும், கோப்பை கழுவுறதும் வெளியில் தெரிஞ்சா, உனக்கு இங்கை எங்கட சாதிசனத்தில் ஒருதரும் பொமபிளை தரமாட்டினம்' என்று கொக்கிபோட்டு எழுதிவிடுவார்கள்.

**மகனைப் பேசியும், அவனுக்கு அறிவுரை கூறியும் எட்டுப் பத்துப் பக்கத்தில் மடல் அனுப்புவார்கள். அந்த மடலின் இறுதியில், 'நீ கண்ட கண்டவையோட ஒண்டா இருக்கிறதும், கோப்பை கழுவுறதும் வெளியில் தெரிஞ்சா, உனக்கு இங்கை எங்கட சாதிசனத்தில் ஒருதரும் பொமபிளை தரமாட்டினம்' என்று கொக்கிபோட்டு எழுதிவிடுவார்கள்.**

பொம்பிளை தரமாட்டார்கள் என்ற விசயத்தைப் பார்த்து அங்குள்ளவர் ஆடிப்போய்விடுவார். இதுவேதான் சாதி விமானம் ஏறிச் சென்று, தமிழர்கள் புலம்பெயர்ந்த நாட்டிலும் மீளக் கட்டமைக்கப்படுவதற்கான அடிப்படையாக அமைந்தது.

எழுபதுகளின் பிற்பகுதியிலும், 1980 களின் முற்பகுதியிலும் ஐரோப்பாவுக்குப் புலம் பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்களின் முதலாவது தலைமுறையினருக்கு, 1985-87 காலப்பகுதியில் 28 வயது முதல் 30 வயதாகியிருந்தது. அதாவது, இவர்கள் திருமண வயதை எட்டியிருந்தார்கள்.

இவர்களுக்குரிய மணப்பெண்கள் அந்தக் காலத்தில் ஐரோப்பாவில் இருக்கவில்லை. தாயகத்தில்கூட இவர்களது வயதுக்குப் பொருத்தமான பெண்களைத் தேடுவதென்பது பெரும் பிரச்சினையாகவே இருந்தது. 25 முதல் 28 வயதுக்குட்பட்ட பெணகளுக்கு அநேகமாக திருமணமாகியிருந்தது. எனவே, 18 முதல் 23 வயதுடைய பெண்களையே பார்க்கவேண்டியிருந்தது.

சில பேராசைக்காரப் பெற்றோர் - மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால், வரப்போகும் மருமகள் தங்களுக்குப் பணம் அனுப்பவிட மாட்டாள் என்ற குறுகிய சுயநல நோக்கில் - பெண் கிடைக்கவில்லை என்று சொல்லிக் காலத்தைக் கடத்திவந்தனர்.

ஆனாலும், பெரும்பாலான பெற்றோர் - தீவிரமாகவே பெண் பார்க்கும் படலத்தில் ஈடுபட்டனர். இதில் ஒரு பகுதியினர் பெரும் சீதனத்துடன் பெண்ணைத் தேடினார்கள். இன்னொரு பகுதியினர் - வசதியற்ற ஏழைக் குடும்பங்களில் பெண் பார்த்தார்கள். வறுமையை உணர்ந்த பெண்தான் தங்களுக்கு ஆதரவாக இருப்பாள் என்று இவர்கள் நம்பினார்கள்.

இங்கே பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகும்போது, அங்கே புலம்பெயர் நாடுகளில் வீடு பார்க்கும் படலமும் நடந்தது.

ஐரோப்பாவில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு அவர்கள் திருமணமானவராக இருந்தால்-மனைவியையும், பிள்ளைகளையும் தங்களது தாய் நாட்டிலிருந்து அழைத்துக் கொள்வதற்கும், திருமணமாகாதவர்களாக இருந்தால் - தங்கள் தாய்நாட்டைத் தவிர வேறு ஏதாவது ஒரு நாட்டுக்குச்சென்று திருமணம் செய்துவிட்டு, அந்தப் பெண்ணை அழைப்பதற்கும், குடும்ப உறுப்பினர்கள் ஒருங்கிணைவு என்ற சட்டத்தின்கீழ் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பாரிஸ் போன்ற நகரங்களில் இதற்குரிய நிபந்தனையாக அவர்கள் வந்து தங்குவதற்கு வசதியான ஒரு வீடு இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சில நாடுகளில் வருமானமும் காட்டப்படவேண்டும் என்ற விதியும் இருந்தது.

பாரிஸ் நகரத்தில் ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் 2 பியஸ் (2 அறை அல்லது ஒரு அறையும், 1 வரவேற்பறையும் சேர்ந்ததைக் குறிக்கும்) வீடு இருப்பது ஒரு அடிப்படைத் தேவையாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் மேலதிகமாக ஒவ்வொரு அறை இருக்கவேண்டும்.

அதாவது, தனிமனிதனுக்கு 16 சதுர மீற்றரிலிருந்து 25 சதுர மீற்றர் பரப்பளவுள்ள வீடும், 3 பிள்ளைகளும் பெற்றோருமாக 5 பேர்கொண்ட குடும்பத்துக்கு 100 சதுர மீற்றரிலிருந்து 120 சதுரமீற்றர் பரப்பளவுள்ள வீடும் இருக்கவேண்டும் என்பது பாரிஸ் போன்ற பெரு நகரங்களில் ஒரு அடிப்படை விதியாக இருந்தது.

பாரிஸ் நகரத்தில் அந்தக் காலத்தில் சாதாரணமான ஒரு அறையுள்ள ($25m^2$) வீடு - (சமையலறை, குளியலறை, கழிப்பறை எல்லாம் அதற்குள்ளேயே அடக்கம்) 2000 பிராங் வாடகையாக இருந்தது.

அப்போது ஒரு தனிநபருக் கான அடிப்படைச் சம்பளம் 3800 பிராங்காகும்.

இரண்டு பியஸ் (2 அறை) வீடு 3500 பிராங்கும், 5 பியஸ் வீடு 5500 பிராங்கும் வாடகையாக இருந்தது.

பழைய மற்றும் லிப்ட் இல்லாத 6 ஆம், 7 ஆம மாடியில்தான் இந்த வாடகை. நகரின் முக்கிய பகுதிகள், தொடருந்து நிலையங்களுக்கு அருகிலுள்ள பகுதிகள், புதிய கட்டடங்கள் என்றால் வாடகை மிகவும் அதிகம். நம்மவர்களால் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது.

திருமணம் என்று வந்தவுடன், நம்மவர்கள் இரண்டு வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டார்கள். அதாவது, அதிகாலை 5 மணிக்கு ஆரம்பித்து, இரவு 11, 12 மணிவரை அவர்கள் வேலை செய்தார்கள்.



1985 இற்கும், 90 இற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கூட்டுத் தங்கல்முறை முடிவுக்கு வந்து, தனி வீடு எடுத்து, அதை தனக்கு வரப் போகும் மனைவிக்காக தயார்படுத்தும்முறை ஆரம்பமாகியது.

இந்தமுறையோடு சேர்ந்து ஒரு புதிய பழக்கமும் தொற்றிக்கொண்டது. அதாவது, ஒரு பெரிய (80 cm) தொலைக்காட் சிப்பெட்டி, டெக், மியூசிக்செட், ஷோக்கேஸ், சோபா செற்றி என்று ஆடம்பரப் பொருட்களை வாங்கிக் குவிக்கும் பழக்கமே அதுவாகும்.

ஐரோப்பாவைப் பொறுத்த வரை, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி முதலான சில பொருட்கள் அவசியமானவையாக இருந்தன. ஆனால், நம்மவர்கள் அந்த அவசியத்துக்கும் அப்பால், அந்தஸ்த்தைக் காட்டுவதற்கு இவற்றை வாங்கியது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஒன்று.

ஒருவர் 80cm அளவுள்ள ஒரு புதிய சொனி தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வாங்கிவிட்டால், மற்றவர் அதேபோல் வாங்குவது அல்லது அதற்கு மேலாக வாங்குவது என அன்று ஆரம்பித்த இந்தப் போட்டி மனப்பான்மை அல்லது பார்த்தொழுகும் மனப்பான்மை இன்று வரை தொடர்கிறது.

பாரிஸ் நகரத்தில் பெரும்பாலான அனைத்து இடங்களுக்கும் 3 நிமிடத்துக்கு ஒரு நிலக்கீழ் தொடருந்துச்சேவை இருப்பதா லும், அதே அறைக்கு பேருந்து சேவை இருப்பதாலும் நம்மவர்கள் கார் வாங்க அக்கறைப்படவில்லை.

இதற்கு முக்கியமான ஒரு காரணம் - வாங்கிய காரை விடுவதற்கு இடமிருக்காது. சில வேளைகளில் தான் இருக்கும் வட்டிலிருந்து இரண்டு மூன்றுகிலோ மீற்றர் தூரம் சென்றே காரை நிறுத்திவிட்டு, மெத்திரோ (நிலக்கீழ் தொடருந்து) வரவேண்டியிருக்கும். மறுநாள் போய்ப்பார்த்தால் கார் அங்கே இருக்காது, திருட்டுப்போயிருக்கும். அதைவிட நிறுத்துவதற்கு கட்டணம் வேறு செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்.

இந்தத் தொல்லைகளால் பாரிஸ் நகர தமிழர்களிடம் அந்தக்காலத்தில் கார் வாங்கும் ஆசை பெரிதாக இல்லை. ஆனால் ஜேர்மன், சுவிஸ், நெதர்லாந்து போனற நாடுகளில் - நம்மவர்கள் பரந்து வாழ்ந்ததால் அங்கு கார் வாங்கும் பழக்கம் அதிகமாக இருந்தது.

ஐரோப்பாவில் வங்கிகளைப் போன்று வட்டிக்கு கடன் கொடுப்பதற்கென்று பல நிறுவனங்கள் இருந்தன. 10 ஆயிரம் பிராங்கிலிருந்து 50 ஆயிரம் பிராங்வரை... முன் நிபந்தனை எதுவும் இல்லை. மாதாந்தம் நீங்கள் விரும்பிய தொகையை திருப்பிச செலுத்தலாம்.

ஒரு மணிநேரத்தில் பணம் உங்கள் கைகளில் நீங்கள் நினைத்த இடத்திற்கு உல்லாசப் பயணம் போகலாம், நினைத்த பொருளை வாங்கலாம், புத்தம் புதிய கார் வாங்கலாம் என்று ஆட்களைக் கவர்ந்திழுக்கும் விதத்தில் பத்திரிகை, தொலைகாட்சி, தெருவோர விளம்பரப் பலகைகளில் இந்த நிறுவனம் செய்யும் விளம்பரங்களைப் பார்த்த நம்மவர்கள் மயங்கிவிடுவார்கள்.

என்ன மாதம் 500 பிராங் கட்டினால் போச்சு என்று இந்த நிறுவனங்களிடம் கடன் வாங்கி, வட்டி கட்டி அழுதவர்கள் நிறையப்பேர்.

10 ஆயிரம் பிராங் இந்த நிறுவனங்களில் கடன் பெற்றால், அது 5 வருடங்களில் வட்டியுடன் சேர்த்து 15 ஆயிரம் பிராங் ஆகிவிடும்.

பொதுவாக வதிவிட அனுமதி (விசா), வீட்டு முகவரி, உறுதிப்பத்திரம் (தொலைபேசிக் கட்டணம் அல்லது மின்சாரக் கட்டணம் செலுததிய சிட்டை), சம்பளப் பட்டியல் இந்த மூன்றையும் கொடுத்தால், இந்த நிறுவனங்கள் கடன்கொடுக்கும்.

நம்மவர்கள் மாறிமாறி ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிடம் கடன்வாங்கி, கடனுக்கான வட்டியையும் கட்டுவதற்கென்றே இரவு பகலாக உழைத்த வரலாறுகளும் நிறையவே உள்ளன.

பொதுவாக - நம்மவர்கள் கடன் வாங்கி வீட்டை வாடகைக்கு எடுத்து, அதை ஆடம்பரப்பொருட்களால் அழகுபடுத்தி, அதற்கு முன்னாலிருந்து படம் எடுத்து அனுப்ப - இங்கே தாயகத்தில் - அந்தப் படத்தைக்காட்டி பெண் பார்த்து, எல்லாம் சரிவந்தால், பெண்ணின் படத்தை அங்கே அனுப்ப, அங்குள்ளவருக்கும் படம் பிடித்துவிட்டால், பிறகு மேலதிக செலவு ஒன்று வந்து சேரும் அதுதான் தொலை பேசிச செலவு.

*(தொடரும்)*

# வடமராட்சிக் கடலில் மீனவர்கள் தாக்கப்பட்டதற்கு கடற்தொழிலக மேம்பாட்டுப் பணியகம் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடலில் இலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டதை யாழ். மறைமாவட்ட கடற்தொழிலக மேம்பாட்டு நடுவப்பணியகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடமராட்சிக்கடலில் எமது மீனவர்கள் தமிழக மீனவர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்ட துயர நிகழ்வு கேட்டு, யாழ். மறைமாவட்ட கடற்தொழிலக மேம்பாட்டு நடுவப்பணியகம் அதிர்ச்சியடைந்துள்ளது

இலங்கைக் கடற்பரப்பின் நீரவள உரிமை, நாட்டின் இறைமையை உறுதிப்படுத்த பூர்வீகக் குறியீடாக கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் அமைகிறது. இந்த ஆலயத்தின் இருப்பை நிலைநிறுத்தவும், அதில் திருவிழா நடாத்தவும் இலங்கை அரசு எடுக்கும் அக்கறை - வட பிராந்தியக் கடலில் தொழில் புரியும் மீனவர்கள் மீது எடுப்பதில்லை என்பதை அன்றாட நிகழ்வுகள் தெளிவாக்குகிறது.

எமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசிப்பது, எமது கடல்வளங்கள் சூறையாடப்படுவதுபோக, தற்பொழுது எமது மீனவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமளவிற்கு நிலமை மோசமாகியுள்ளது.

எமது மீனர்வளின் தொழில் வளங்களுக்கும், உயிர்களுக்கும் உத்தரவாதம் கொடுக்கமுடியாத அரசு - கோயில் திருவிழாவிற்கு பாதுகாப்பும், ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கு உற்சாகம் கொடுப்பதும் எமக்கு முரணாகத்தோன்றுகிறது. ஆலயத் திருவிழாவிற்கான ஆயத்தங்கள் நடைபெறும் இத்தருணத்தை பயன்படுத்தி, இலங்கை அரசிற்கு எமது மீனர்வகளின் கடல்வள உரிமைக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலைப் போக்க அழுத்தம் கொடுக்கும்படி கேட்கின்றோம் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சர்வதேச செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

செல்வராஜா சிவபாக்கியம் (அம்மன் கோயிலடி, மயிலிட்டி), சிவாணந்தன் சகுந்தலாதேவி (கல்வயல்), ச.வசந்தலட்சுமி (கொழும்புத்துறை), ச.தவராசா (வளலாய்), ந.சரஸ்வதி (சுதுமலை தெற்கு), வ.பவளம் (கொழும்புத்துறை), ச.சறோஜாதேவி (அராலி தெற்கு), த.கிரியலின் (மல்வம், உடுவில்), ச.மரியம்மா (மே/பா துரைராசா, 74/1, குருசோ வீதி, யாழ்ப்பாணம்), ந.கணமணி (செல்லக்கிளி அம்மான் இடம்பெயர்ந்தோர் முகாம், அரியாலை), த.கிருபராணி (அராலி வடக்கு), ச.ஜெகதாம்பாள் (சங்குவேலி), மனோகரன் லலிதா (சில்லாலை தெற்கு), ஜோசப் ஃபிரீடா (41/3 செம்மணி வீதி, நல்லூர்), குணபாலசிங்கம் கமலராணி (கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்), நாகமணிப்பிள்ளை பிரின்ஸ் நவநேசன் (மட்டுவில் வடக்கு), ஞானேஸ்வரி தர்மகுலசிங்கம் (சங்கானை), அப்புத்துரை விக்னேஸ்வரன் (அளவெட்டி தெற்கு), சுந்தரராணி செல்வராசா (மானிப்பாய் வடக்கு), மாரிமுத்தர் ஞானசேகரம் (யாழ்ப்பாணம்), அருட்செல்வி நீதிராசா (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி), பாஸ்கரன் மேரி கஜோர் (மண்ணியந்தோட்டம்), செல்வராசா நல்லம்மா (மணியந்தோட்டம்), கந்தையா திருச்செல்வம் (மே/பா. ந.குமரகுருநாதன், மூளாய் பிள்ளையார் கோவிலடி, மூளாய்), மார்க் கண்டு உமாதேவி (ஐந்து சந்தி தபாற்கந்தோர், வண்ணார் பண்ணை) என்போரையும் -

கலாதாஸ், கமலகுமாரி (தண்ணீர்த்தாங்கி வீதி, குருநகர்), குலசேகரம் பாலகிருஸ்ணன் (33, கைலாய பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்), அரியகுட்டி லட்சுமிப் பிள்ளை (சுதுமலை கிழக்கு), சபாபதிப்பிள்ளை (ராதா வாசம், வல்வெட்டி) ஆகியோரை செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்பு கொள்ளவும்.

## நீர்கொழும்பு வைத்தியசாலையில் மறியற் போராட்டம்

(கொழும்பு)

நீர்கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரையும், தாதி ஒருவரையும் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து, மறியற் போராட்டத்தில் தாதியரும், வைத்தியரும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மதுபோதையில் வந்தவர்களே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். மதுபோதையில் வந்த இருவர் நோயாளர் விடுதியில் உள்ளவர்களைப் பார்த்துவிட்டுப் போவதற்கு அனுமதி கோரியுள்ளனர். அதற்குத் தாதியும், வைத்தியரும் அனுமதி வழங்காததையடுத்து, அவர்களைத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர். இவர்களைக் கண்டு பிடித்து உரியதண்டனை வழங்க வேண்டு மென்றே இந்த மறியற் போராட்டம் இடம்பெற்றது. (01)




# அமெரிக்க அதிகாரப்பகிர்வுத் திட்டம்; கெயிட்டி எதிர்க்கட்சியால் நிராகரிப்பு!

கெயிட்டியில் தொடரும் குழப்பங்களுக்கு தீர்வுகாண்பதற்காக அமெரிக்காவின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை எதிர்க்கட்சி நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி ஜீன் பேட்ரான்ட் அரிஷ்டைட்டுடன் அரசியல் பகிர்வினை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சியினர் மறுப்புத் தெரிவித்ததோடு ஜனாதிபதி பதவியிலிருந்து ஜீன் பேட்ரான்ட் அரிஷ்டைட் விலகவேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்.

இதனிடையே, போராளிக்குழுக்கள் கெயிட்டியின் வடபகுதியிலுள்ள பெரும்பாலான பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. தலைநகர் போட் ஒ பிரிஷ்சைக் கைப்பற்றுவதற்காக அவர்கள் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.

எதிர்க்கட்சியினர் போராளிகளின் செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. தமது நிலைப்பாட்டினை கடிதம் மூலம் அரசுக்கு தெரிவித்துள்ளதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த போல் டெனிஷ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்காக கொடுக்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்த போதிலும் மீண்டும் 24 மணி நேரத்தை அரசு நீடித்திருக்கிறது.

அமெரிக்க அரசின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட திட்டத்தின் மூலம் ஜனாதிபதி அரிஷ்டைட் குறைந்த அதிகாரங்களுடன் 2006 வரை பதவியில் நீடிப்பதற்கு வழி அமைத்திருந்தது.


சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள குழப்பம் சர்வதேச நாடுகளிடையே விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து இங்கிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளும் தமது நாட்டுப் பிரஜைகளை கெயிட்டியில் இருந்து வெளியேறுமாறு கேட்டுள்ளன.



போராளிகள் இரண்டாவது பெரிய நகரான கப் கெய்ரியினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதால் அப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியன சீர்குலைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் கைப்பற்றப்படும்போது படையினரின் அதிகாரங்களைக் குறைத்து ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படும் என போராளிக் குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

## மொறோக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்க அனர்த்தத்தில் 600 பேர்வரை பலியாகினர்!



மொறோக்கோவின் வடகிழக்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்துள்ளது.

நிலநடுக்கத்திலிருந்து தப்பிக்கொண்டவர்கள் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் பரந்த வெளிகளில் இரவைக் கழிக்கின்றனர்.

மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கியுள்ளவர்களை தேடிவருகிறார்கள். சிலர் தமது கைகளால் கற்களை அகற்றி தமது உறவினர்களைத் தேடிவருகின்றனர்.

மலைப்பிரதேசத்தில் நிலநடுக்கம் நிகழ்ந்துள்ளதால் படையினரும், செம்பிறைச் சங்கத்தினரும் அப்பிரதேசத்துக்குச் செல்வதில் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ,மீட்புப்பணிக்கு பல உலக நாடுகள் உதவுவதற்கு முன்வந்துள்ளன.

மோப்ப நாய்கள், பாரந்தூக்கிகள் சகிதம் மீட்புப்பணியாளர்களை பிரெஞ்சு அரசாங்கம் அனுப்பிவைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும், செம்பிறைச் சங்கமும் உதவிப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன. அமெரிக்கா, பெல்ஜியம், ஜேர்மன், போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளும் உதவிகளை வழங்கியுள்ளன.

அமெரிக்காவின் புவியியல் கணிப்பீடுகளின் மூலம் நிலநடுக்கத்தின் வீச்சு 6.5 ரிச்சட் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## கொமான்சி ரக ஹெலி தயாரிப்பை அமெரிக்கா இடைநிறுத்தியது

(வொஷிங்ரன்)

அமெரிக்க படையின் கொமான்சிரக ஹெலிகொப்ரர் ஒன்றைத் தயாரிக்கும் திட்டத்தை பென்ரகன் நிறுத்தவுள்ளது. கடந்த 20 ஆண்டு காலமாக 'கொமன்சி' என அழைக்கப்படும் புதியரக ஹெலி கொப்ரர் தயாரிப்பில் "போயிங்" மற்றும் 'சி கோர்ஸ் கைய்' ஆகிய விமானங்களைத் தயாரித்த நிறுவனம் முயற்சிசெய்துவந்தது.



விமானத் தயாரிப்பிற்கான பணிகளுக்கு 40 பில்லியன் டொலர்கள் செலவாகும் எனக் கணிக்கப்பட்டிருந்தது. ஈராக, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்க ஹெலிகொப்ரர்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக்களை அடுத்து 'கொமனசி' ஹெலிகொப்ரர் தயாரிப்பை நிறுத்தவேணடி ஏற்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொமன்சி ஹெலிகொப்ரர் தயாரிப்பிற்காக 20 ஆண்டுகள் செலவிடப்பட்டுள்ளதாகவும் இக்காலப் பகுதியில் ஹெலிகொப்ரர் தயாரிப்பில் புதிய நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் ஹெலிகொப்டர்களுக்கு அதிக இழப்புக்கள் ஏற்பட்டுவருகின்றமையால், நவீனரக ஹெலிகொப்டரை உருவாக்க வேண்டியுள்ளதால் முன்னயை திட்டங்களை நிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

## உகண்டாவில் நடைபெற்ற அகதிகள் படுகொலைக்கு தஞ்சமளித்தவரே உடந்தை!

(உகண்டா)

கடந்த வாரம் உகண்டாவில் லீரா பிரதேச அகதிமுகாமில் நூற்றுக்கணக்கானோரைப் படுகொலை செய்த தீவிரவாதிகளுக்கு அப்பிரதேசத்தில் வாழும் 'அக்போலிஷ்' இனத்தவர் உடந்தையாக இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'அக்போலிஷ்' இனத்தைப் பழிவாங்குவதற்கு வேறு ஒரு குழுவொன்று கொலை வெறியுடன் நடமாடியதாகவும் லிராவின் வடபாகத்தில் ஒருவர் கல்லெறிந்து கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம அவர்களை அகற்றியதாகவும், 21 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

இந்த தீவிரவாதிகள் குழுவான 'லோட் ரெசிஷ்டன்' எனப்படும் அமைப்பை அரசால் கட்டுப்படுத்த இயலாதுள்ள நிலையைச் சுட்டிக்காட்டும் வகையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபை இதில் தலையிட வேண்டும் எனவும் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தகைய கொடூர சம்பவத்தை அடுத்து அக்கோலியில் இருந்து அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வடகொரியா - அணுசக்தித் திட்டங்களை நிறுத்துமாறு அமெரிக்கா வேண்டுகோள்!

வடகொரியா தனது அணுசக்தி தொடர்பான திட்டங்களை நிறுத்திவிடவேண்டும் என அமெரிக்கா கேட்டுள்ளது.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெறும் ஆறு நாடுகள் பங்குபற்றும் கூட்டத்தில் வைத்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆனால் வடகொரியா தனது அடிப்படைக் கொள்கைகளிலிருந்து மாறப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் கருத்து தெரிவித்த அமெரிக்க அதிகாரி ஜேம்ஷ் கெலி, வடகொரியா அணு ஆயுதத் திட்டங்களை நிறுத்துவதையே அமெரிக்கா விரும்புவதாகவும் யூரேனியத்தை வலுப்படுத்துவதை நிறுத்வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அவற்றை நிறுத்துவதாயின் பொருளாதார உதவிகளை, வழங்கவேண்டும் எனவும் தமது இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வட கொரியா அமெரிக்காவிடம் கேட்டிருந்தது.

இவற்றை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே யொங்பொயோங்கில் அமைந்துள்ள புளுட்டோனியம் உற்பத்திசெய்யும் அமைப்பை நிறுத்த முன்வரும் எனவும் வடகொரியா தெரிவித்திருந்தது. மேலும் இநத அமைப்புக்களை நிறுத்துவ தாயின் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்திருந்தது.

## விமானக் கட்டுப்பாட்டாளர் கத்தியால் குத்திக் கொலை!



ஜேர்மனியின் தென்பகுதி நகரான யூறலின் தென்பகுதியில் கடந்த் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரு விமானங்கள் நடுவானில் மோதிக்கொண்டதில் 52 ரஷ்ய சிறுவர், சிறுமிகள் உட்பட விமானச் சிப்பந்திகள் மரணமடைந்த விபத்துச் சம்பவத்தின்போது விமான கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றியவர், சுவிற்ஸர்லாந்தின் தலைநகர் சூரிச்சில் - இல்லத்தில் வைத்து கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையாளிக்கும் விமானக் கட்டுப்பாட்டாளருக்குமிடையே பலத்த வாக்குவாதம் இடம்பெற்ற பின்னரே கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும், தற்போது ஜேர்மன் மொழி பேசும் ஒருவரை பொலிஸார் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானங்கள் இரண்டும் மோதிக்கொண்ட சம்பவம் நிகழ்ந்தபோது ஜேர்மனுடனான சுவிஸ் எல்லையில் ஸ்கை கயிட் எனப்படும் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்தில் கொல்லப்பட்ட விமானக் கட்டுப்பாட்டாளர், கடமையில் ஈடுபட்டிருந்தார்.

இரு விமானங்கள் நேருக்கு நேராக வந்துகொண்டிருந்தவேளை, விமானத்தை தாழ்வாக பயணம்செய்ய முயற்சிக்குமாறு கட்டுப்பாட்டாளர் வேண்டியிருந்தார். ஆனால், விமானத்தின் உள்ளே காணப்படும் சமிக்ஞையில் விமானத்தை உயரப்பறக்குமாறு காட்டியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொணடபோது, கட்டுப்பாட்டுத் தளத்தில் உள்ள கருவிகள் நன்கு செயற்படவில்லை என அறிய முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமான விபத்துக்கான தவறை மரணமடைந்த கட்டுப்பாட்டாளர் ஏற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அணுசக்தி திட்டங்களை வெளியிட ஈரான் தொடர்ந்து மறுப்புத் தெரிவிப்பு!

(தெஹ்ரான்)

தனது அணுசக்தி திட்டங்களை ஐக்கிய நாடுகளின் அணுசக்தி அமைப்பிற்கு வெளியிட ஈரான் தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

குறிப்பாக அணுகுண்டு தயாரிப்பிற்கான யுரேனியத்தை பிரித்தெடுக்கும் வடிவமைப்புக்களை தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

'பொலோனியம்' எனப்படும் அணுக்கதிர் வீச்சுள்ள உலோகத்தினையும் ஈரான் பரிசோதித்து வருவதாகவும் இந்த உலோகம் அணுகுண்டு தயாரிப்பிற்கு பயன்படுத்தலாமெனவும் ஐக்கிய நாடுகளின் அணுசக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு தனது அணுசக்தி தொடர்பான திட்டங்களை வெளியிடவுள்ளதாக ஈரான் தெரிவித்திருந்தது.

அண்மையில் யுரேனியத்தை பிரித்தெடுப்பதற்காக பி-2 எனப்படும் நவீன கருவிகளை உருவாக்கியுள்ளதெனவும் லிபியாவிற்கு அணுசக்தி தொடர்பான தொழில்நுட்பங்களை ஈரான் விற்றுள்ளமை அண்மையில் தெரியவந்துள்ளதாகவும் சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் 'பொலோனியம்' எனப்படும் உலோகத்திற்கு எதுவிதமான பயன்பாடுகளுமில்லை. இதனால் ஈரான் இந்த உலோகத்தை என்ன நோக்கத்திற்காக பரிசோதித்து வருகின்றது என்பது அணு ஆயுதம் தொடர்பான அறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதாகவும் தெரிவிக கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மலையக பஸ் விபத்தில் தமிழ் மாணவி உயிரிழப்பு!

## கலவரத்தை அடுத்து ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

அம்பகமுவவில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் தமிழ் மாணவி ஒருவர் உயிரிழந்ததையடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதனைத் தொடர்ந்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

அம்பகமுவவின் ஹட்டன் நோர்வூட் மகா வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் விமலா என்ற மாணவி தனியார் மினிபஸ் ஒன்றினால் மோதப்பட்டு உயிரிழந்தார்.

இதனால், ஆத்திரமடைந்த மக்கள் இந்தத் தனியார் மினிபஸ்ஸை அடித்து நொருக்கி, தீயிட்டுக்கொளுத்தியதுடன் அந்தப் பகுதியில் கலகத்திலும் ஈடுபட்டனர்.

இதனை கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்ட பொலிஸார் மீதும் பொதுமக்கள் தாக்குதல் நடத்த முற்பட்டவேளை . பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைவீசி மக்களை விரட்டியடித்தனர்.

இதனையடுத்து - மஸ்கெலியா, ஹட்டன், பொருவத்தலாவை முதலான பகுதிகளில் நேற்று நண்பகல் முதல் இன்று மதியம்வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகன சாரதி கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அந்தப் பகுதியில் இயங்கும் ஆறு பாடசாலைகள் இரண்டு நாட்களுக்கு இயங்கமாட்டாதென அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற வன்முறைகளின் போது மூன்று பொலிஸ் வாகனங்கள் பொதுமக்களால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (01)

### அல்வாய் பகுதியில்

## வீட்டிற்குள் நுழைந்தவர்கள் தாயையும் மகனையும் வெட்டினர்!

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் அமைந்துள்ள சதாபொன்ஸ் கல்வி நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றினுள் புகுந்த சிலர் அங்கிருந்த தாயையும் மகனையும் வெட்டிக் காயப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

நேற்று முன்தினம் இரவு சுமார் ஒரு மணியளவில், குறித்த வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத குழு வீட்டுக்கு கற்களை வீசி யன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன் அங்கிருந்த தாயையும், மகனையும் வெட்டிக்காயப்படுத்தினர்.

பரஞ்சோதியம்மா (வயது 80) அவரது மகனான க.சிறீஸ்கந்தராசா (வயது 52) ஆகிய இருவருமே வெட்டுக்காயத்திற்கு இலக்கானவர்கள் ஆவர். இதில் பரஞ்சோதியம்மாவின் இரண்டு கைவிரல்கள் துண்டிக்கப்பட்டதுடன். சிறீஸ்கந்தராசாவின் உடம்பு முழுவதும் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன.

காயமுற்ற இருவரையும் அயலவர்கள் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று வைத்திய சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (17)

## நாவலப்பிட்டிய நகரசபைத் தலைவர் கைது!

நாவலப்பிட்டி நகரசபையின் கிரியா கருணாரத்ன, உபதலைவர் மற்றும் இரண்டு ஐ.தே.க ஆதரவாளர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மட்டக்களப்பு கிறிஸ்தவ தேவாலயத்தில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்!

மட்டக்களப்புப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் எரியுண்ட நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை மட்டக்களப்பு எல்லை வீதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் 20 வயது மதிக்கத்தக்க இந்தப் பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தேவாலயத்திற்கு வழிபடச் சென்ற ஒருவர் மேற்படி சடலத்தை கண்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸாரும் மாவட்ட நீதிபதியும் விசாரணைகளை நடத்தினர். மேலும் சடலம் அடையாளம் காண்பதற்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (01,07)

## இருகட்சிகளின் கொள்கைகளையும் தோற்கடிப்பதே எங்களது பணியாகும்!

### கலாநிதி விக்கிரமபாகு கூறுகிறார்

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் கொள்கைகளைப் பின்னடைவுக்குட்படுத்தவே, தமது கட்சி இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தபின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர்-

தேசியவளங்கள் உழைக்கும் வர்க்கத்துக்கே சொந்தமானது. ஆனால் அவை அந்த மக்களுக்கு கிடைப்பதில்லை. உழைப்பாளர்கள் தமது உரிமைக்காகப் போராடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### வடமராட்சி கடலில்

## இந்திய மீனவர் அடாவடி; கண்டித்து நேற்று கூட்டம்

பருத்தித்துறை கடற்பரப்பில் மீனவர்கள் - இந்திய மீனவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வடமராட்சியில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு சக்கோட்டை சவேரியார் ஆலயமுன்றலில் இந்தக் கண்டனக்கூட்டம் இடம்பெற்றது.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்டனக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சிவநேசன், சி.சிவமகாராசா ஆகியோர், கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரி யோசெப் மற்றும் கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள், கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மேற்படி சம்பவத்தைக் கண்டித்து உரையாற்றினர். (13)

## அனுருத்த – ரட்னசிறி தேசிய பட்டியலிலும் இல்லை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களான அனுருத்த ரத்வத்த மற்றும், முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரது பெயர்கள் இடம்பெறவில்லை, ஆனால் ஜனாதிபதியின் ஆலோசகரும், தற்போதைய ஊடகத்துறை அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரின் பெயர் முதலிடத்தில் உள்ளது.

இந்த தேசிய பட்டியலில் மொத்தமாக 29 பேரின் பெயர்கள் உள்ளன. இவர்களில், ஏழு முஸ்லிம்களும், நான்கு தமிழரும் அடங்குகின்றனர்.

பட்டியலில் உள்ள முக்கியமானவர்களின் பெயர்விபரம் வருமாறு-

லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் ஏ.வி.சுரவீர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பேராசிரியர் விஷ்வ வர்ணபால, டி.யூ. குணசேகர ஜனதாச பீரிஸ், சேகு இஸ்ஸதீன், அன்வர் இஸ்மாயில், எம்.எம்.சுஹெய்ர். ராமலிங்கம் - சந்திரசேகரன், சுப்பையா பத்மலோசனா, வி.தியாகராஜா.

## பொலிஸ் அதிகாரி மீது ஐ.தே.க குற்றச்சாட்டு!

### பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கான பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியாக, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்னவை நியமித்ததற்கு ஐக்கிய தேசியக்கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவிற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ முறைப்பாடு செய்துள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்ன பக்கச்சார்பாக நடந்து கொள்வார் என்ற வகையில், இவரது புதிய நியமனம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஜெயந்த விக்கிரமரத்னவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவரின் செயற்பாடுகள் குறித்து, முன்னரும் தாம் முறைப்பாடுகளைச் செய்திருப்பதாகவும் செனரத் கப்புகொட்டுவ மேலும் தெரிவித்தார் (01)

## புளியங்குள விபத்தில்..

ஞர்கள் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த லொறி மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் இருந்த இருவரையும் விடுதலைப் புலிகள் மீட்டு சர்வதேச செஞ்சிலுவை ஊடாக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் கொண்டு செல்லப்பட்ட இருவரில் தலையில் படுகாயமடைந்திருந்த மாங்குளத்தைச் சேர்ந்த ஜெகன் (வயது-21) என்பவர் வழியிலேயே மரணமடைந்தார்.

கழுத்தில் படுகாயமடைந்த சசி என்பவர் வவுனியா வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைததியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மரணமான ஜெகனின் சடலம் மேலதிக விசாரணைகளுகாக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (03)

### காணாமற்...

போன மீனவர் பற்றிய தகவல்களை பெற்றுத்தருமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கண்காணிப்புக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்து கடற்படையுடன் கண்காணிப்புக் குழு நடத்திய பேச்சை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

### வாக்குச்சீட்டு..

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வேட்பாளர் இலக்கங்களை ஒதுக்கும் பணியை தேர்தல் திணைக்களம் ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### தமிழ்மக்கள்...

தும், வாக்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலும் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள் செயற்படவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சிறப்புத்தளபதி ரமேஷ் மக்களை வாக்களிப்பதிலிருந்து இராணுவம் தடுக்குமானால் அதற்காக இலங்கை அரசதரப்பு சர்வதேச சமூகத்துக்கு பதில் சொல்லவேண்டியிருக்கும். இந்த நிலையில் உணர்ச்சி பூர்வமான மக்களின் வாக்களிப்பை எவராலும் தடுத்துவிட முடியாது எனவும் ரமேஷ் எச்சரித்தார். (-)

## வாக்களிக்கும் உரிமை...

இருக்கும்.

இம்முறை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஐரோப்பிய ஒன்றியமும் ஈடுபடவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஏனெனில் தேர்தல் மோசடிகள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை முன்னணியில் திகழ்வது கவலைக்குரிய விடயமாகும்.

வடக்கிலும், கிழக்கிலும் சுமார் 2 லட்சம் வரையான தமிழ் வேட்பாளர்கள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளனர்.

இவர்களது உரிமை மறுக்கப்படுமானால் அது ஜனநாயக விரோத செயல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியலமைப்பை...

தலில் போட்டியிடாது விலகிக்கொண்டார். அவ்வாறிருந்தபோதும் ஜனாதிபதி அதை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில் - நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்கப்போவதாக அண்மைக் காலமாக ஜனாதிபதி கூறிவருவது ஏற்கக்கூடியதல்ல.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறையை தற்போது அகற்ற வேண்டிய தேவை ஏற்படவில்லை. நாட்டுக்கு சமாதானம், பொருளாதார வளர்ச்சி என்பனவே தற்போது அவசர தேவைகளாகும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை அடிப்படையாக வைத்து பேச்சு நடத்தப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த விடயத்தில் முற்றிலும் வித்தியாசமான கொள்கையையே கடைப்பிடிப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (01)

எமது நிலம் எமக்கு வேண்டும்
'எமது நிலமே எமக்கு வேண்டும்'
தமிழ்த் தேசிய ஒற்றுமையை மீண்டும் வெளிப்படுத்த நாம் அனைவரும் ஏப்ரல் 2 இல் வாக்களிப்போம்.
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
(641)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.